# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

ஜனவரி - பெப்ரவரி 2026

ஆண்டு 6 ▲ இதழ் 4

விலை 250/-



## கவிஞர் மு.முருகேஷ்

ஆளுமை அறிமுகம்

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜனவரி - பெப்ரவரி 2026

ஆண்டு 6 ▲ இதழ் 4

பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா

Chief Editor & publisher : Sithy Wafeera

சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்

Hon. Editor : Tamilnenjam Amine

ஆசிரியர் குழு :

Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ,
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்,
மின்னத் ஸரா பரூஸ்

வடிவமைப்பு:

Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

email :

muththamizh.kalasam@gmail.com

The Editor of “Muththamizh kalasam”,

23, Amarasekara Mawatha,

Colombo 05., Sri lanka


# அனுபவம்

குவியலில் கிடக்கிறபோது ,
அழகாய்த்தான் தெரிகின்றன.
பார்த்துப் பார்த்து வாங்கும்போது,
உள்ளே ஒளிந்திருக்கும்,
முட்கள் தெரிவதில்லை.

வாய்க்கு ருசியாய்,
சமைக்க முயலும்போதுதான்,
அவற்றின் இயல்பு வெளிப்படுகிறது.
விராலாக இல்லாவிட்டாலும்,
கொக்கிசான்கள் போதும் ,
விருந்தின் வெற்றிக்கு.
பொட்டியான்களாகவும்,
பேத்தைகளாகவும் அவை,
தம்மை வெளிக்காட்டுகிறபோது,
ஏமாந்து போன நம் அறியாமை,
சற்று அதிர்ச்சியானதுதான்.

கரையொதுங்க வேண்டியவற்றை,
கல்லைக்குள் நிரப்ப எண்ணும்,
நம் முட்டாள் தனத்திற்கு,
எந்தப் பேத்தையும் பொறுப்பில்லை.

விரால் கொக்கிசான் சுறா சூறை,
அறுக்குளா பாரை பொட்டியான்
பேத்தை,
அனைத்துமிணைந்த கடலும்,
ஆறும் போலவேதான் வாழ்வும்.

**சம்மாந்துறை மஷூறா**

# ஆசிரியர் பக்கம்

*அன்பார்ந்த வாசகர்களே!*

*வணக்கம்!*

*(அஸ்ஸலாமு அலைக்கும்!)*

*கடந்த மாதம் டிட்வா புயல் ஏற்படுத்திய காலநிலை சீர்கேடு, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயற்கை அனர்த்தத்தை ஏற்படுத்தி, பலநூறு மக்களைக் காவு கொண்டதுடன், மக்களின் வாழிடங்களையும், வாழ்வாதாரங்களையும் நிர்மூலமாக்கி கரைகடந்து போனது யாவரும் அறிந்ததே!*

*பாரிய சேதம் ஏற்படுவதற்கான மூலகாரணத்தை ஆராய்ந்தோமானால், மக்களின் இயற்கைக்கு முரணான வாழ்வியல் முறைகள் இதற்கு பெரும் பங்காற்றியிருப்பது புரியும். மரங்களை வெட்டுதல் மண்ணரிப்பிற்கு ஏதுவாக அமைவதையும், மக்கள் வாழத் தகுதியற்ற ஆபத்தான பகுதிகளை தமது வாழிடங்களாக மாற்றிக் கொண்டதும், மழைநீரும் வெள்ளநீரும் வழிந்தோடும் இடங்களை வழிமறித்து,தம் தேவைக்கேற்ப உறைவிடங்களாக்கியதும் சில முக்கிய காரணங்களாகக் குறிப்பிடலாம்.*

*நாம் எந்தளவு இயற்கைக்கு இயைவான ஒரு வாழ்வியல் மாற்றத்தைக் கொண்டு வருகிறோமோ அந்தளவு, இயற்கையும் நம்மை நேசிக்க ஆரம்பிக்கும்.*

*இந்த இயற்கைப் பேரிடரால் சில நன்மைகளும் விளைந்தன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மனிதநேயம் தழைத்தோங்க, மக்கள் ஒற்றுமை எனும் விருட்சத்தின் ஆணிவேர் உறுதிபெற ஆரம்பித்ததை பல்வேறு நிகழ்வுகள் எடுத்துக் கூறின.*

*இனிவரும் காலங்களிலும் மிக்க அவதானத்துடன் செயல்பட்டு, இன்னல்களைத் தவிர்ப்போம். பிறந்திருக்கும் 2026 எல்லோருக்கும் சுபீட்சத்தை வழங்க பிரார்த்திக்கிறேன். இயற்கைப் பேரிடரில் உயிர் நீத்த அனைவருக்கும் இதய அஞ்சலிகள்! (எல்லாம் வல்ல இறையோன் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக!)*

*இழப்புகள் வேதனை தந்தாலும், வாழ்க்கையை மீட்டெடுக்கும் முயற்சியில் தன்னம்பிக்கையுடனும் முன்னைவிட வலிமையுடனும் முன்னேறுவோம்.*


*கொண்டாடும் அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துகள்!*

*நன்றி!*

*எஸ். வ.்.பீரா*

(பிரதம ஆசிரியர்)

# முத்தமிழ் கலசத்துக்கு இந்திய பேராசிரியர் புகழாரம்!



வஃபீரா வஃபியை பிரதம ஆசிரியராக கொண்டு வெளிவரும் முத்தமிழ் கலசத்துக்கு இந்திய பேராசிரியரான காதர் மொஹிதீன் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழகத்தின் உயர் விருதான 'தகைசால் தமிழர் விருதினை' தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்களின் கரங்களினால் பெற்ற இந்திய முஸ்லிம் லீக்கின் தேசியத் தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் Ex. M.P.. அவர்களுக்கு இலங்கையில் 'அயலக ஆளுமைகளுக்கு அலங்காரம்' என்ற நிகழ்வில் கௌரவம் வழங்கப்பட்டது. அவ்விழாவில் கலந்து கொள்ள இலங்கை வந்திருந்த பேராசிரியருக்கு எமது 'முத்தமிழ் கலசம்' இதழொன்று வழங்கப்பட்டபோது அதனை முழுமையாக வாசித்த பேராசிரியர் 'முத்தமிழ் கலசம்' இதழைப் பாராட்டி புகழாரம் சூடினார்.

பேராசியர் காதர் மொஹிதீன் அவர்கள் 'முத்தமிழ் கலசம்' இதழை வாசிக்கும்போது பிடிக்கப்பட்ட படம் இது.



இதேவேளை, இந்திய யூனியன் மகளிர் அணித் தலைவி பாத்திமா முஸப்பர் அவர்களுக்கும் முத்தமிழ் கலசம் இதழொன்று கையளிக்கப் பட்டது. சிரேஷ்ட எழுத்தாளரும் அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரியுமான கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் இதனை கையளிப்பதையும் படத்தில் காணலாம்.



கவிஞர்/நூலாசிரியர் நூருல் ஐன், கவிஞர்/ நூலாசிரியர்நஜ்முல் ஹுசேன், இந்திய பேராசிரியர் காதர் மொஹிதீனையடுத்து இருப்பவர் இந்திய பிரபல ஊடகவியலாளர் சாஹுல் ஹமீத்,தெஹிவளை கல்கிசை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி சரீனா முஸ்தபா, பிரபல பாடகர் மொஹிதீன் பேக்கின் மகள் பாடகி மொயினா பேகம்.

**பட உதவி: சாதிக் சிஹான்**



# வசை

பூப்போன்ற உள்ளம்
புதுமனை புகுந்ததும்
புண்ணாகிப் போனது
அது ஏனோ?

பெயர் சொல்ல பிள்ளை இல்லை
பெருமை கொள்ள ஆளில்லை
கட்டியவனால் தொல்லை
குடும்பத்தில் வசைகளும் கொள்ளை

சுபகாரியங்களில் சுதந்திரமில்லை
சுபீட்சமாக வாழ வழிகளுமில்லை
நீ தொட்டால் விளங்காது
விழிகளைப் பிதுக்காது விலகு

நீ புகுந்து வந்ததால் புதுமை
என்றோன்று இல்லை
புது வரவை தரவில்லை
தரித்திரம் தனியாக இருந்தால் தான்
உன் சரித்திரம் ஊருக்கு புரிந்திடும்
ராசியில்லாதவளுக்கு நலங்கு
வீட்டுக்கு வர எதற்குத் தவிப்பு
முதியவர் புதியவர் முணுமுணுப்பு
மலடிக்கு எதற்கு இந்த துடிப்பு
பேசாமல் ஒதுங்கி இருப்பது சிறப்பு
என்ற கரகரப்பு

ஓரமாக இருந்துக்கோ
சபையில் எதற்கும்
ஒட்டிக் கொண்டால் வெட்டி விடுவேன்

பெண்ணுக்கே பெண் எதிரி
இதில் ராசியில்லாதவள் என்று கூறும்
விழியுள்ள பல கருத்துக் குருடிகள்

**பானு ஜிப்ரி**
சாய்ந்தமருது



# சுயம்வரம்

வாலிப வண்ணங்கள்
வானவில் தந்திட
ஆசை மனதினில்
ராகம் பிறக்கிறதே
வார்த்தைகள் இன்றியே
வானமும் மின்னலும்
காதல் உரசலில்
கானம் படித்திடுதே!

மார்கழித் தூறல்கள்
பூவில் விழுந்திட
மங்கை விழிகளில்
ஜாலம் தவழ்ந்திடுதே!
நேரமும் காலமும்
கூடிட இன்பங்கள்
வாழும் இளமையை
வாரி அணைக்கிறதே!
மாலையும் மஞ்சளும்
மன்றலில் தோரணம்
மன்னவன் வந்திட
ஆடை உடுத்திடுதே!


மோகமும் தாபமும்
நெஞ்சினில் மோதிட
காலை வரும் வரை
காதில் இனித்திடுதே!

மேகக் குழலொன்று
மேடை உலா வந்து
சொல்லும் லயத்தினில்
என்னை மறந்திருந்தேன்
தேவர்கள் வாழ்த்திடும்
தேனிதழ் கண்டதும்
தேய்ந்தது என்னுயிர்
இன்னும் என்ன
சொல்லவோ

நாணத்தில் மூடிய
நங்கையின் பாஷை
யில் நாதமினிப்பதை
தென்றல் சொல்லும் அழகோ
வேள்வியில் மந்திர
மேளம் முழங்கிட
கோல இள மயில்
தோகை விரித்திடுதே!

காதலின் சந்தங்கள்
இதயமொலித்திட
காமனின் கணைகளும்
பாயும் கலையிதுவோ
வீணையின் அதிர்வுகள்
தேகமிழைத்திட
இதயத்தின் சங்கமம்
இதம் தரும் சுயம் வரமோ

D. ஸ்ரீதரன்





# ஊமை விழிகள்

சலிம் நானா ஹோட்டல் ஒன்று நடத்திவந்தார் வழக்கமாக பஸ்கள் நிறுத்தப்பட்டு பயணிகள் சாப்பிடுவது, டீ குடிப்பது எல்லாமே வழமை போன்றிருந்தது இது இரவு நேரக்கடை என்பதனால் பஸ் ஒன்றன் பின்னால் ஒன்று வந்து நின்றது. நெருக்கடியாக இருந்தனால் எதையும் கவனிக்க யாராலும் முடியவில்லை எல்லோரும் இறங்கி டீ குடித்துவிட்டு மறுபடியும் பஸ்ஸில் ஏறினர். பஸ்கள் புறப்பட்டு சென்றன

மணி இரண்டாகி விட்டது

சற்று தொலைவில் ஏதோ அழுகை சப்தம் கேட்டுக்கொண்டே இருந்தது அங்கிருந்த ஹோட்டல் உதவியாளர் தாவூத் போய் பார்த்தார். அங்கே ஒரு பையன் அழுதுகொண்டே இருக்கிறான்.

'ஐயோ தம்பி நீ யாரப்பா நீ இங்கு என்ன செய்கிறாய்? ஏன் அழுகிறாய்' எனக்கேட்டார்

எதுவுமே பேசாமல் அழுதுகொண்டே இருந்தான்.

மீண்டும் மீண்டும் கேட்டார்.

அப்பையன் அழுகையை நிறுத்தவே இல்லை.

என்ன செய்வதன்று தெரியாது. அப்பையனை அழைத்துக்கொண்டு ஹோட்டல் முதலாளி சலீம் நாநாவிடம் தாவூத் கூட்டிச்சென்றார்.

சலிம் நானாவோ இந்தப் பையனைப் பார்த்து இரக்கத்துடன் 'யாரு பையனப்பா நீ? இங்கு எப்படி வந்தாய்?' என்று கேட்டார் சலீம் நாநா. எதுவுமே பேசாமல் கண்ணீரை தன் கைகளால் துடைத்துக் கொண்டான் அப்பையன்.

'தம்பி உன் பெயர் என்னப்பா' எனக்கேட்டார் சலீம் நானா.

அவனோ பதில் கூற முடியாமல் அமைதியாய் இருந்தான்.

நீண்ட நேர அமைதிக்குப் பின் அப்பையனுக்கு சாப்பிடுவதற்காக காய்ந்துபோன ரொட்டியும் தேனீரும் தாவூத் கொடுத்தார்.

பொழுது மெல்ல விடியத் தொடங்கியது. காலையானதும் கடையை மூடிவிட்டு அப்பையனை அழைத்துக்கொண்டு அவரது வீட்டுக்கு சென்றார் சலீம் நாநா.

அப்போதும் கூட அப்பையன் ஒன்றும் பேசவே இல்லை வீட்டினுல் நுழைந்ததும் சலீம் நானா மனைவியை வருமாறு அழைத்தார்.

பார்த்த மனைவி கண்களுக்கு பையன் பரட்டைத் தலையும் குழி விழுந்த கன்னமும் குருவிச்சை வாயும் தொலைந்ததை தேடும் விழிகளுமாக இருந்தான்.

'இந்தப் பையன் யாரு' என வினவினாள் நடந்ததை கூறிமுடித்தார் சலீம்.

பாதி விரும்பியும் மீதி விரும்பாமலும் 'உள்ளே வா' எனக்

கூறி காலையுணவை பரிமாறும் முன் 'குளித்து வா' என தனது மூன்றாவது பையனின் உடுப்பு ஒன்றை எடுத்து பின்புறமாக அனுப்பினாள் பரீதா

உடுப்பை வாங்கிக் கொண்டு குளிக்காமலே பாதி நேரத்தை கழித்துவிட்டான் அப்பையன்.

புது இடம், தெரியா முகம், பயம் இவையெல்லாம் இப்பையனை பயமும் கவலையும் கொள்ள வைத்தன.

கூட்டி வந்த சித்தப்பாவும் விட்டுவிட்டுப் போயிட்டாரு. என்னால் பேச முடியாது என்பதை எப்படி சொல்லுவேன் என வாழை மரத்தடியில் உட்கார்ந்தபடி இருந்தான்

நேரம் ஆகியும் காணவில்லையே என தேடிவந்த சலீம் நானா 'என்னப்பா செய்கிறாய்? கவலைப்படாதே! உன்னை எப்படியாவது உன் பெற்றோரிடம் சேர்த்து விடுவேன். என்னை நம்பு! இப்போதாவது உன் பெயரை சொல்! நீ எந்த எந்த ஊருப்பா? யாருடன் இங்கு வந்தாய்?' என்றெல்லாம் கேட்டார் சலீம் நானா

கண்களில் நீர் பெருகியது அழுதபடி சைகைமூலமாக தன் கைவிரலால் நாவினை தொட்டு என்னாலே பேச முடியாது என கூறினான்

சலீம் நானா கண்ணீரை அடக்கிக்கொண்டு அப்பையனை கட்டியணைத்த படி வீட்டுக்குள் கூட்டிப்போனார்.

இரு வாரம் ஆகியும் யாரும் அப்பையனை

கேட்கவுமில்லை.

தினமும் இரவில் வரும் பஸ் ட்ரைவர்களிடம் சலீம் நானா இப்பையனைப்பற்றி சொல்லிக்கொண்டே இருப்பார்.

ஒரு மாதம் கழிந்தது.

பரீதா ஒரு திருமண வைபவத்திற்கு செல்லுவதற்காக தனது கை வளையலை போடுவதற்காக வைத்த இடத்தில் பார்த்தால் ஆனால் அது இல்லை. தேடினால் அதை அவள் வைத்த இடத்தில் காணவில்லை.

வீட்டில் அவர்களது மூன்றாவது பையனுடன் இப்பையன் விளையாடிக் கொண்டிருந்தான். தன்னுடன் இருந்த பையனிடம் கேட்டாள் 'என் கைவளையலை நீ எடுத்தாயா?' என கோபத்துடன் கேட்டாள்.

பதிலே கூறாமல் சைகை மூலம் இல்லை என காட்டினான் அப்பையன்.

கடைக்கு கோல் எடுத்து 'என்னங்க என்னுடைய கை வளையலைக் காணவில்லை. புதுசா வந்த பிசாசு தான் எடுத்துவிட்டது' என புலம்பினாள். அப்போது சலீம் நான் வந்து விசாரிக்கிறேன் எனக் கூறி அழைப்பை துண்டித்துக் கொண்டார்

வீட்டிக்கு வந்த சலீம் நானா 'தம்பி கண்ணா இங்கு வா உனக்கு ஏதாவது பணம் வேண்டுமா' எனக்கேட்டார் அதற்கு மௌனமாகவே இருந்துவிட்டான். மீண்டும் அழுதுகொண்டு இல்லை என சைகை மூலம் காட்டினான்.

அப்போது மனைவி கூறியது சரியாக தெரிந்தது சலீம் நானாவுக்கு

சிறு பிள்ளைதானே எடுத்து விட்டானோ என யோசித்தார் சலீம் நானா

அப்போது அவரது மனைவி 'எங்கடா தம்பி என்ட கை வளையல்' என்று கேட்டபடி சூடு வைத்து விட்டாள் கண்ட பயல்களை எல்லாம் கூட்டிவந்தா இப்படித்தான் என கேட்டவாறு கோபப்பட்டாள், ஆத்திரப்பட்டாள்.

அப்பையனால் வலி தாங்க முடியவில்லை அழுதுகொண்டே இருந்தான். சலீம் தன் மனைவி பரீதா தண்டித்ததற்காக கோபப்பட்டார்.

இன்னமும் இப்பையன் இருந்தால் பிரச்சினை வரும் என எண்ணிய சலீம் போலீஸாரிடம் ஒப்படைக்கவேண்டும் என நினைத்தற்கான காரணம் அவன் அங்கு பாதுகாப்பாக இருப்பான் என்பதனாலே

அப்பையன் சலீமை கவலையுடன் பார்த்தான்.

அடுத்த நாள் காலை போலீஸாரிடம் ஒப்படைத்தார்.

விசாரணையும் நடந்து கொண்டிருக்கிறது. ஏதும் பயனில்லை.

அப்போதுதான் சலீம் நானா இப்பையனால் வாய்பேசமுடியாது எனக்கூறினார்.

நீதிமன்றத்தில் ஒப்படைப்போம். இப்பையனுக்காக அரசாங்க வக்கீல் வாதாடினார். ஆனால் அடுத்தடுத்த தீர்ப்பின் பின்பே இச் சிறுவனை சீர் திருத்தப்பள்ளியில் சேர்த்துவிட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

அப்பாவியான அப்பையன் அவ்விடுதியில் அனுமதிக்கப் படுகின்றான்.

கால ஓட்டத்தில் இவ் உண்மை உயிர் பெற்றது. பலவருடங்களின் பின் சலீம் நானாவின் மூத்த பையன் போதைக்கு அடிமையாகி குடித்துக்கொண்டும் கும்மாளம் அடிக்கிறான். என்ற செய்தி சலீமுக்கு வந்தது.

திடீரென போலீசாரினால் கைது செய்யப்பட்டதாக தகவல் கிடைத்தது. காவல் நிலையத்துக்கு சலீம் நானா சென்று பார்த்தார். இவரது மூத்த மகன் விளக்கமறியலில் இருக்கிறான்.

அப்போதுதான் இவன் தான் இவனது தாயினுடைய கைவளையலையும் திருடியுள்ளான் என்பது தெரியவந்தது. இயல்பாகவே அமைதியானவரும் இரக்கக்குணம் கொண்டவருமான சலீம் மனமுடைந்து நின்றார்.

தன்னாலே ஒரு அப்பாவி தண்டிக்கப்பட்டு விட்டானே என்று.

மனம் வருந்திய சலீம் நானா விடுதியில் இருக்கும் மாதவனை பார்த்து மன்னிப்பு கேட்கவேண்டும் என எண்ணி

அப்பையனை பார்க்க

விடுதிக்கு வந்தார் அங்கு மாதவன் இல்லை என்பது தெரியவந்தது. சலீம் நானா துக்கத்தை தொண்டைக்குள் அடைத்தபடி துயரத்துடன் வீட்டிக்கும் போகாமல் கடற்கரையில் அமர்ந்து கொண்டிருந்தார்.

சற்று தொலைவில்

விடுதியில் மாதவனுக்கு மேற்

பார்வையாளராக இருந்த கேசவன் ஐயாவை கண்டார் அவர் அருகில் போய் ‘மாதவன் இப்போ எங்க ஐயா நான் தேடிப்போனேன் அங்கு இல்லை. இப்போ நான் மாதவனைப் பார்க்க வேண்டும். எனக்கு ஒரு உதவி செய்யுங்க ஐயா! நான் மாதவனை சந்திக்கவேண்டும். அவனிடம் மன்னிப்புகேட்க வேண்டும்‘ என நடந்தவற்றை கூறி முடித்தார்.

‘சரி கவலையை விடுங்க! நான் வெகு சீக்கிரமாக உங்களுக்கு தகவல் தருகிறேன்‘ என கூறியவாறு ‘போய் வருகிறேன்‘ என்று புறப்பட்டார்.

ஒரு நாள் மாலை நாலு மணி அளவில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது கேசவனிடமிருந்து. ‘ஐயா சொல்லுங்க என்ன விடயம்?’ ‘; மாதவன் நாளை திருப்பூருக்கு மாவட்ட கண்காணிப்பாளராக பதவியேற்கிறார் என்பதை பத்திரிகையில் படித்தேன். அவரை சந்திக்க போகப்போகிறேன். நீங்களும் வரப்போகிறீங்களா? என கேசவன் கேட்டார்

‘ஆமாம் நானும் வருகிறேன் ஐயா‘ எனக் கூறினார் சலீம் நாநா.தன்னால் பேசவே முடியாது என்ற பெரிய வலியுடன் வாழ்ந்த மாதவனுக்கு சிறுவர் சீர்திருத்தப் பள்ளியிலே அன்பு காட்டி மாதவன் என பெயர் வைத்து இன்று இந்த இடத்தில் மாவட்ட கண்காணிப்பாளராக வந்திருக்கும் அவனைப் படிக்க வைத்தது எல்லாமே கேசவன் ஐயா என்பது தெரியவந்தது

மாதவனுக்கு அலுவலகத்தில் கௌரவம் சிறப்பாக நடைபெற்றது அங்கு வந்த ஒரு தொழிலதிபர் ஒட்டோகிராப்பை கொடுத்து எழுதித்தருமாறு கேட்டார். அப்போது புன்னகையுடன் அதை வாங்கி எழுதினார்.

என்னால் பேச முடியாது என்
இதயம் பேசுது இன்னும் சிலர் பேசுகிறார்கள் இதயம் ஊமையாகவே இருக்குதே! இதிலே பல உண்மைகளும் கூடத்தான் ஊமையாகின்றன.

மாதவனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் சிறப்பாக நடந்தது. மாதவனின் குணம், பதவி இவையெல்லாம் பற்றி வருகை தந்த அதிதிகளின் சிறப்பு உரைகளும் இருந்தன கேசவன் ஐயா சலீமைக் கூட்டிக்கொண்டு போய் அருகில் நிறுத்தினார்.

மாதவன் சலீம் நானாவை பார்க்கும் போது கண்களில் நீர் வடிந்தது. ‘என்னை மன்னித்துக் கொள்ளுங்க! நான் பெரிய தப்பு செய்தேன். நீங்க வளையலை திருடவில்லை. அதை எடுத்தது என் மூத்த பையன் என மனவருத்தத்துடன் கூறினார்.

மாதவன் சலீம் நானாவின் இரு கைகளையும் பிடித்த படியே புன்னகை பூத்தார். சலீம் நானாவுக்கு தன்னால் எந்த ஆறுதலையும் கூற முடியவில்லையே! மொழி இருந்தும் வழியில்லையே! என கட்டித்தழுவி பின் கேசவன் ஐயாவையும் கட்டித்தழுவி விடைபெற்று பிரிந்தார் மாதவன்.

**மீராநகர் றிப்கா**
**நிந்தவூர்**

# எழிலான வீடு

வீதியில் பாய்விரித்து
பூக்களும் நிழலும்
குடைவிரித்துப் படர்ந்த
குல்மோகர் மரம்..
வரிசையாக பாதையை
வழிகாட்டும் வயலட்
வண்ணப் பூச்செடிகள்
அழகான வரவேற்பறை
நிறம் மாறும் சரவிளக்குகள்
அடுக்கி வைக்கப்பட்ட
புத்தகங்கள் கொண்ட அலமாரி
கலைநயத்தோடு கண்சிமிட்டும்
கண்ணாடி பொம்மைகள்
கோப்பைகளும் விருதுகளும்
அடுக்கடுக்கான வரிசைகளில்
பளீரென்ற பூந்தொட்டிகள்
தளிர் இலைகளும்,
வண்ணப் பூக்களுமாய்
கொள்ளை அழகில்
மெத்தென்ற இருக்கைகள்
கலையாத வண்ண விரிப்புகள்
எங்கும், எதிலும்
நேர்த்தியும் ஒழுங்கும்..
மெல்லிய இசையில்
அறையெங்கும் நறுமணம்
வெறுமையை அப்பிக் கொண்ட
சோகத்தில்
இரு மனங்கள் கூடவே
கண்கள் மூடிய புத்தர்சிலை
ஒருவரை ஒருவர்
பார்த்தபடி எதிரெதிரே
சிணுங்கும் கைபேசி..
ஒவ்வொரு ஞாயிறு மட்டுமே
சுவாசிக்கும் வீடு

**புதுகை ஆதீரா**

# காத்திருப்பும் கவிதைகளும்



காத்திருந்து கன்னம் கவலையால் சிவக்கும்
நினைத்தழுது நெஞ்சம் நொறுங்கிவிட நேரும்
குழந்தையென யானும் குமுறியழ தோன்றும்
பேதை இவள் பாசம் படகேறிக் கடக்கும்
காதலனை கண்ட நொடி கனவுகளும் கலையும்
விழித்தெழுந்து பார்த்த கணம் வீழ்ந்து மனம் உடையும்
வேண்டாம் இவன் காதல் என்று விந்தை மனம் நினைக்கும்
காத்திருப்பும் காகிதமும் கவிதை எழுத தூண்டும்
சிதறிய முத்துக்களை செதுக்கி மனம் சிரிக்கும்
எழுதிய போன் வரிகள் எழுந்து கதை பேசும்

**M.N. Niha Nifnath**

# ஹைக்கூ

சேஹூ மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ.

01)
மின்மினிப் பூச்சிகள்
விட்டுவிட்டு மின்னும்
மாறும் மனிதர்கள்

02)
திருமண நாள்
தொடரவே இல்லை
மனித வாழ்வு

03)
வெறிச்சோடிய சாலை
பலதையும் சொல்கிறது
பகல் கனவு

04)
ஆங்காங்கே நீர்த்துளிகள்
பரவி இருக்கும்
வானத்து நட்சத்திரங்கள்

05)
அடை மழை
முனகிக் கொண்டிருக்கிறது
அடம்பிடிக்கும் குழந்தை

06)
வெள்ள நீர்
வடியாமல் நிற்கிறது
விழியோர நீர்

07)
மின்கம்பியில் வௌவால்
தொங்கிக் கொண்டிருக்கிறது
இலையில் நீர்த்துளி

08)
உதிர்ந்த இலை
ஓரமாக படுத்து உறங்குகிறது
வயோதிப உருவம்

09)
பறக்கும் பட்டாம்பூச்சி
சிறகுகளை விரிக்கும்
வாலிப நினைவுகள்

10)
அரசமரத்தின் இலை
சலசலத்துக் கொண்டிருக்கிறது
மழலையின் சிரிப்பு

11)
தெருவோர ஆலமரம்
சரிந்து விழுகிறது
தந்தையின் உயிர்

12)
மலை அடிவாரம்
ஒரே பக்கமாக சாய்கிறது
மாலை வெயில்

13)
கடும் மழை
கனதியாக இருக்கும்
தொடரும் மரணங்கள்

14)
பட்ட மரம்
சரிந்து விழுகிறது
குருவியின் கூடு

15)
மார்கழி மழை
விட்டுவிட்டு கேட்கிறது
மழலையின் சிரிப்பு

16)
பறவையின் கண்
அகன்று விரிந்திருக்கின்றது
மலர்ந்த பூ

17)
பலத்த மழை
ஓய்வதாக இல்லை
மனைவியின் பேச்சு

18)
கறையான் புற்று
நனைந்து கரைகின்றது
மண் குடிசை

19)
வெள்ளை மேகங்கள்
அசையாமலே இருந்த இடத்தில்
துருவ மலைகள்

## கல்வி இன்று கடைத் தெருவில்

நிலாச் சோற்றுக்காய்
வானத்திற்கு - கரம் நீட்டும்
பிஞ்சு மழலையின் ஏக்கமாய்
ஏழைகளின் எட்டாக் கனியாய்
தூர நின்று தொடத் துடிக்கும்
பணக்காரர்களின் கைப்பற்றல் -
தேடு பொருளாய் கல்வியோ
இன்று கடைத் தெருவில்.

வெட்டுப் புள்ளிகளின் உயரத்தில் -
எம்மை தட்டி விடும்
கனவுகளை எல்லாம்
எட்டிப் பிடிப்பதற்காய் - உயர் கல்வியை
பணங்கொடுத்தேனும் பெற்றுவிட
ஓடி... ஓடி... பறப்பதால் - விலைப்
பொருளாய் கல்வியோ
இன்று கடைத் தெருவில்.
இலவசக் கல்வியை இலக்கற்றதாய் -
நாம் இகழ்ந்து விட்டு
பணத்தை எல்லாம் இங்கிதமின்றி
அள்ளி எறிந்து - பதவியை
பற்றிக் கொள்வதற்காய் பணத்தில்
பார் தேடி திரிவதால் - காசுப்
பொதியாய் கல்வியோ
இன்று கடைத் தெருவில்.

விட்டில் பூச்சிகளாய் வெளிப் - பகட்டில்
விரைந்து தனியார் கற்றலைத் தேடி
வீதியெங்கும் பூத்திருக்கும் கல்வி
நிலையங்களில் வட்டமிட்டு
ஓடித் திரிவதால் - எல்லோரும்
இலகுவாய் வாங்கும்
பொருளாய் கல்வியோ
இன்று கடைத் தெருவில்.

**திருமதி.றஹீமா இன்சார்,**
மீராவோடை.

# விடுதியின் விதிகள்

வீட்டின் தேவதையாய் வீடு முழுக்க நிரப்பப்பட்ட நான்
இன்று மாதத்தில் ஓரிரு நாள் தரிசிக்கும் விருந்தாளியாய் மாற்றியது
இந்த விடுதியின் விதிகள்
சில சமயம் புறக்கணிக்கப்பட்ட உம்மாவின் பேச்சுக்களையும்
ஏச்சுக்களையும் இன்று செவிப்பறையில் நிரப்பிக் கொள்ளத்துடித்து
வாரத்தில் ஒரு நாள் வாடகை வினாடிகளாய் கனக்கிறது

அவளின் சமையலின் தரத்தையும் நிறத்தையும் மதிப்பிட்ட எனக்கு
இன்று நாவெல்லாம் காத்துக்காய்கிறது அவளின் ஒற்றைப்பிடி சோற்றுக்காய்
விரல்கள் கோர்த்து வாப்பாவின் இளவரசி தான் என வாதிட்ட நான்
இன்று அவரின் ராஜ்ஜியத்தையும் ராஜாங்கத்தையும் அன்பின்
பரிசுகளையும் தொலைத்து தூரம் தவித்துக் கிடக்கிறேன்

எனக்கு என்னவென்றாலும் இழக்கவும், கொடுக்கவும்,பறிக்கவும்
உரிமை கொண்டு ஒரே அறைக்குள் இருந்து அதே அறை
இரண்டாகப் பிளக்கும் படி சண்டையிட்ட என் உடன்பிறப்புகளை
இப்போது மனதில் ஓரமாய் மெல்லியதாய் அழைக்கிறேன்
மீண்டும் ஒரு சண்டைக்காய்

கோபம் கொண்டாலும் அதில் கோடி
முறை வேடம் தரித்தாலும்
தீராத உறவாய் நீங்க முடியாத
பந்தமாய் நண்பர்களின் கூட்டம்
தினமும் வட்டமிடுகிறது
எனைச்சுற்றிய நினைவுகளின்
வளைவுகளில்
உற்றார் உறவினர் என
அத்தனையும் விட்டு விடுதியில்
சில விதிகளின் பொருட்டு
விட்டுச்சென்ற இந்த சிறு
தொலைதூரம்
பல மைல் தூரங்களாய் நீள்கிறது



தீனின் பாதையில் தாகம் தீர்க்க புறப்பட்ட நான்
கடினமின்றி வாழ்ந்தாலும் இந்த உணர்வுகளின் பிடிகளில்
உறவுகளின் அடிகளினை கடந்து சென்று கால் வைப்பதற்குள்
தொண்டைக்குழி வரைக்கும் கனத்து விடுகிறது சில பல நினைவுகள்

வரும்போதும் போகும்போது தோன்றாத இந்த எண்ணங்கள் எல்லாம்
அரை நொடிக்கு ஒருமுறை நெஞ்சறையில் ஓடுகிறது
உம்மிடம் ஓடி அணைக்கத் துடிக்கிறது

**றீனத் றாசிக்,** இலங்கை, நிந்தவூர்.


# எங்கே இருக்கிறார் பாரதீ

அடங்கிக் கிடப்பதே கற்பெனப் போதிக்கப்பட்ட
செம்மறியாடுகளின் சிரசுகளின்மேல்பயணிக்கின்றன சிலுவைச்சுமைகள்
வாயாடிகள் எனப் பெயர் சூட்டப்படும் நியாயத் தராசுகள்
சமூகத்தில் இடமில்லாததால் ஒத்தாசையாய்
ஒதுங்கிக்கொள்கின்றன நீதி தேவதையின் கரங்களில்

திருமணச் சந்தையில் இடமாறும் பெண்டிரின் நிறம்
கருப்பென்கையில் விலைகூடிவிடுகின்றன விற்பனைப்பொருள்களுக்கு
மகளாகையில் இளவரசிதான் என்றாலும் அடிமையாவதெல்லாம்
மனைவி என்னும் இலக்கணங்களெல்லாம் இங்கே எழுதப்படாத விதிகள்
மேனியுரசும்பேருந்துப் பயணங்களில், அத்துமீறும் அலுவலகப் பொழுதுகளில்
அடங்கிப் போவதே மடந்தைக்கழகு என்னும் கற்பிதங்களெல்லாம்
வெளியெங்கும் விரவியிருக்கும் வேளையிலும்
அத்தனையும் உடைத்து ஆதிக்கங்களை அநாயாசமாய்ப் பார்த்தபடி
வீதியிறங்கி வெற்றி நடைபோடுகிறாள் ஒருத்தி.

அவளின் கைப்பைக்குள் இப்போதும் எதையோ
எழுதிக்கொண்டேதான் இருக்கிறார் பாரதீ.

**இனியவன்காளிதாஸ்**
உடுமலை



# மாற்றம் படுத்தும் பாடு

அகல் விளக்கு, சிம்னி
விளக்காகிட வாழ்ந்தோம்
சிம்னி விளக்கு மின் விளக்கான
போது மகிழ்ந்தோமே!
மாற்றங்கள் ஏற்றம் தரும்போது
மகிழ்ச்சியே
கடிதப் போக்குவரத்தில் கழிந்தன
காலங்கள்

தொலைபேசி வந்தது வீடுகளில்
மணி ஒலித்ததுவே!
கூடவே கொண்டு போக முடியா
நிலை வருத்தம் தந்ததே!
அலைபேசி வந்தே
கையடக்கமான கருவியானதே!
உள்ளங்கையில் உலகம்
என்றானது மகிழ்ச்சியே

காலங்களைக் கட்டிப்பிடித்து
விரயமாக்கிட
அலைபேசி முன்னேற்றம்
அனைவரையும் மயக்கியதே!
கண்களை வேறுபக்கம் திருப்பிட
முடியாமல் கட்டிப்போட்டதே!
கருத்துகளும் சிந்தனைகளும்
முடங்கிப் போனதே!

ப்ளூ டூத்தும் இயர் போனும்
சேர பித்து பிடிக்கும்
பைத்தியமாய் தெருவெங்கும்
பேசித் திரிவர்
எதிரில் வருவோரும் திடுக்கிட்டு
நின்று செல்வர்
விளையாட்டுகள் பலவிதம் விழிகள்
அசைவதில்லை
சீட்டு விளையாட்டுகள் அடித்து
வீழ்த்தி விடும்
சாவே அதன் ஒரே முடிவாய் செத்து
மடிவரே!

நல்லவைகள் நிறைய கொட்டிக்
கிடக்க
தீயவைகள் மாயவலை
விரித்திழுக்கும்
நேரம் போவது தெரிவதேயில்லை
பசியும் மறக்கின்றதே
கண்களுக்கும் செவிகளுக்கும்
கெடுதல் எனத் தெரிந்தும்

அலைபேசியோடு அலைவோரைக்
கண்டால் அந்தோ பரிதாபம்!
நிலை மாறுமோ நீடிக்குமோ
பயமாகிறதே நமக்கு
அளவோடு பெற்று வளமோடு
வாழுங்கள் என்பர்
நிலவோடு பேசும் காலங்கள்
குறைந்ததும் அலைபேசியால்
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும்
நஞ்சு அறிவீர் மக்களே!

**புல்லாங்குழலன்,**



# காலத் திகிரி

## தொடர் கட்டுரை


**நெல்லை. G. சோமசுந்தரி,** சென்னை- 122.
(கவிஞர், எழுத்தாளர், தொல்லியல் ஆர்வலர்)


நதி நீரில் நகர்ந்து ஓடும் கூழாங் கற்களாக அதன் 'மூலம்' அறியாத ஒரு புள்ளி தான் எல்லாவற்றிற்கும் ஆரம்பமாகவும், ஒரு முடிவாகவும், வாழ்வின் பாதையில் இணைக் கோடாக நீள்கிறது. காலத் திகிரி என்பது காலம் நகர்வதையும், அதன் சுழற்சியையும் குறிப்பால் உணர்த்துவதாகும். சுருக்கமாகச் சொல்வதென்றால் காலத் திகிரி என்றால் இயற்கை, சக்தி, மற்றும் காலத்தின் இயக்கத்தை வெளிப் படுத்தும் இலக்கியங்களில் காணப் படும் அழகான, தமிழ்ச் சொல்லாகும்.

கடிகாரத்தின் முட்கள் போலப் பகல், இரவு, வெயில், மழை, வெப்பம், குளிர்ச்சி போன்ற இயற்கையான மாற்றத்தின் சுழல் வட்டத்தைக் குறித்து இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கையில் வரையறை செய்யப் பட்ட விதிகளின் அமைப்பை, காலம் என்கிற கணக்கில் தத்துவத்தின் அடிப்படையில் நுட்பமாக ஆராய்ந்தால், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளில் காலம் என்பது மூன்று

கோட்பாடுகளை உள்ளடக்கி உள்ளது. அவை காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்பதாகக் காரணமும் விளைவும் (*cause and effect*) என்ற முதல் கோட்பாட்டுடன், பரிமாணக் கோட்பாட்டு விதியின் (*Dimension Theory*) காலப் பாதையில், நம் வரவிற்காகக் காலம் காத்து நிற்பதாகவும், வாழ்வின் நிகழ்ச்சியாக, நம் பாதையில் காலத்தை நடந்து சென்று சந்திக்கிறோம் என்பதாகவும் குறிப்பிடுகிறார்கள். இதில் மூன்றாவது காலத்தின் சுழற்சி கோட்பாடாக (*Circular Theory*), மிகவும் சுவாரசியமாகக் காலம் என்பது எப்போதும் ஒரு சக்கரம் அல்லது சுழல் வட்டமாகவே பரிணமித்து நிற்காமல் சுழன்று கொண்டே இருப்பதாக, அறிவியல் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

இதனையே திருமூலர் ‘காலசக்கரம்’ என்றும், பிள்ளை பெருமாள், அஷ்டப் பிரபந்தத்தில் ‘கால திகிரி தலைநாளில் இட்ட கோலங்களே’ என்றும் குறிப் பிடுகிறார்கள். மொத்தத்தில், கால வட்டத்தின் தத்துவம் ஒரு சங்கிலித் தொடர் போல ஒரு சுழற் தத்துவமாக உள்ளது. அப்படிப்பட்ட, காலத் திகிரி எனும் இத்தொடரானது, எதனைச் சுழற் தத்துவமாக வைக்கப் போகிறது என்பதை இதனைத் தொடர்ந்து படிக்கும் போது நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

மூச்சின் தவம் என்பது எப்படிப் பட்டதாக இருக்கும் என என்றைக் கேனும் நாம் உணர்ந்திருக்கிறோமா? புதைக்கப்பட்ட மண்ணில் வெடித்து வரும் இளம் தளிர்க்குத் தெரியும். வெயிலுக்கும், மழைக்கும், வரட்சிக்கும், குளிருக்கும், வேர்பிடிக்க, அது போராடிய பொழுதுகளைச் சாதாரணமாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது. கனவுகளோடு வாழும் ஒரு இளம் துளிர் விருட்சமாய் மாற, அதன் கிளைப் பரப்பி பூமியில் நிற்க, அதனின் திடமான உறுதி என்பது ஒரு நாளில் கிடைத்த வரமாக அதற்கு இருக்காது என்பதைப் புரிந்து கொள்ளும் போது இந்த வாழ்வானது அழகாகிறது. அகம் சார்ந்த உள் நோக்கிய நிறையத் தேடலுக்கு நம்மிடம் இங்குப் பதில் இல்லை. இவ்வுலகில் எத்தனையோ அதிசயங்களும், ஆச்சரியங்களும், நம்மைச் சுற்றி நடந்து கொண்டே தான் இருக்கின்றன.

பரிணாமத்தின் அத்தனை வளர்ச்சியிலும் மிகவும் விசித் திரமான, இன்று வரை கணிக்க இயலாத ஒன்றாக இருப்பது ‘மனித மனம்’ என்றால் நாம் அனைவரும் அதனை ஒப்புக் கொண்டு தானே ஆக வேண்டும். நவீன இயந்திர உலகில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றை எங்கேயோ தொலைத்துக் கொண்டு மனச் சிறைக்குள் கூண்டுக்கிளியாய் தவித்துக் கொண்டிருக்கும் உள்ளங்கள் எல்லாம் இங்கே எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றன. இதன் கூக் குரல்களுக்குப் பல நேரம் செவி சாய்க்காமல், நகர்ந்து செல்லும் போக்கு எல்லோரிடமும் இருப்பது என்பது இங்கு ஒன்றும் விசித்திரமல்ல. அப்படிப்பட்ட மனமானது, உச்ச பட்ச தன் உணர்வின் அகம், புறம்



சார்ந்த நிகழ்வுகளை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு மனிதன் எவ்வாறு எதிர்கொண்டு, எப்படி தன் இயல்பை வெளிப்படுத்தியிருப்பான் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

தற்செயலாக, ஒருநாள் நாம் எதையோ தேடும் போது, எப்போதோ எழுதி வைத்த பழைய நினைவுக் குறிப்புகளின் பக்கங்கள் கையில் கிடைத்துப் பார்க்க நேர்ந்தால், நமது மன பறவையானது பின்னோக்கி பறந்து சென்று மனதைச் சிலிர்க்க வைத்த அனுபவம் நம்மில் பலருக்கும் ஏற்பட்டிருக்கும். அவ்வாறே ,நம் மனதில் ஆழ்மனப் படிமங்களாய் உள்ளே பொதிந்திருக்கும் மனப் பூக்கங்களை திரும்பிப் பார்த்து ஆசுவாசப்படுத்துவதற்கும், மறந்த ஏதோ ஒன்றை மறுபடியும் எடுத்துப் பொருத்திப் பார்ப்பதற்கும் இத்தொடர், கொஞ்சம் காலத் திகிரியில் பொழுதுகளை, கடன் வாங்கி பின்னோக்கி நம்மை அழைத்துச் செல்ல இருக்கிறது.



காலசக்கரத்தின் பக்கங்களைத் திரும்பிப் பார்க்கக் கொஞ்சம் வாழ்வின் ஈரத்தோடு இதில் பயணிக்கலாம்.

உயிரின் ஆன்மாவானது எப்போதெல்லாம் ஒருவருக்குத் துடிக்கும்? எப்போதாவது இதனை உற்று நோக்கியிருக்கிறோமா? இயற்கையின் படைப்புகளில் பகுத்தறிவால் மாறுபடும் மனிதனின் ஆறாவது அறிவைத் தாண்டி, இப்பூமிப்பந்தில் இருக்கும் செடி, கொடி, மரம், ஓர் உயிரி, பூச்சி, பறவை, மிருகம், ஆகாயம், காற்று, நிலம், நீர், நெருப்பு இப்படி நீளும் பட்டியலில் இவையெல்லாம் சந்திக்கும் ஒற்றைப் புள்ளி, அத்தனை ஜீவராசிகளும் இணையும் இடமாக அகம் சார்ந்தோ, புறம் சார்ந்தோ, அது எதுவாயினும், ‘உணர்வு‘ எனும் ஒற்றை மையத்தின் சக்தியிலேயே அனைத்தும் சங்கமித்துப் பிறக்கின்றன.

ஆம்! அந்த உணர்வின் மையம் சரியாக இருக்கும் பட்சத்தில் மனதிற்குள் ஏற்படும் இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்து செல்லும் பருவ நிலை போன்றது என்பது எத்தனை ஆச்சரியமான உண்மை. அந்த வகையில் மரபும், சூழலும் தான் மனித ஆளுமைக்கான காரணங்களாக, எதையும் வாழ்வில் எதிர்கொள்கின்ற நெருக்கடியான சிக்கல்களிலிருந்து, சிறிய விதை பெரிய விருட்சமாவதைப் போன்று வெளிவரத் துணை புரிகின்றன என்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது .

ஒரு வீட்டின் வாழ்வு செம்மையாக இருந்தால், நாட்டின் வாழ்வு தானே சிறக்கும் என்பது நம் மூதாதையர்களுடைய வழக்கு மொழி. அகம் சார்ந்து சரியாக இயங்கும் போது, நம்மைச் சுற்றி புறச் சுழலும், 'குன்றின் மேல் இட்ட விளக்கு போல மிளிரும்' என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். ஒரு நாட்டின் வரலாறு என்பது குறிப்பிட்ட இனத்தாரின் மொழி, பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல் ஆகியவற்றில் முகம் பார்க்கும் கண்ணாடியாக நம்மிடம் பிரதிபலிக்கிறது.

பிறர் மனதை தன்னுள் உணர்ந்து பாடும் இலக்கியங்களும், மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் கலைகளும், மனிதனை உற்சாகமான ஒருகொண்டாட்டமான நிலைக்கு அழைத்துச் செல்லும் என்பது மட்டுமின்றி மானுடம் பாடும் எக்கருத்துக்களும் மனிதன் பூமி உள்ளவரை நிலைத்து நின்று சிறப்பை தரும் என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

'அன்பின் வழியது உயர்நிலை' என்றால் அது எல்லா காலங்களிலும் சாத்தியப்பட்டு நின்று உள்ளதா? என்பதை அறிய அடுத்த தொடர் வரை பொறுத்திருங்கள். காலத்தின் திகிரி நம்மிடம் எதைப் பேச இருக்கிறது என்பதை அறிய உங்களுடன் நானும் காத்திருக்கிறேன். தொடர்ந்து பயணிப்போம்.

*(திகிரி சுழலும் -1)*

# ஒதுங்கி விடு



எதுவாகிலும்
என்னுடன் பேசிவிடு.
புறமது கூறல் வேண்டாம்
உதவாப் பொய்மைகள் பல புனைந்து.
என்னிருப்பு நிலையானது
என்றென்றும்!
இடர் தொடர் களைந்து
கடந்து களைத்த பயணமதுள்

துயர் நிறை அனுபவங்கள்
தூரமொன்றாய் பதியமிருப்பினும்
அதுவே எனது படிகல்!
நான் அயராதெழுந்து
நிமிர்ந்து நடப்பதற்கு.
என்னுயர்ச்சி
உனக்குத் தாழ்ச்சியெனில்
ஒதுங்கி விடு எனைவிட்டு.

நான் இன்னும்
உயர வேண்டும்
என் முயற்சியில்
எனக்கான வாழ்வினில்

**அலெக்ஸ் பரந்தாமன்**
புதுக்குடியிருப்பு.

# அவளுக்காய் சில நிமிடம்...

பத்து மாதம் என்னை
கருவறையில் சுமந்தாயே!
பிண்டமாய் இருந்த எனக்காய்
ஆர்வத்தோடு காத்திருந்தாயே!

ஆண்பிள்ளை என்று
எல்லோரும் கூறினாலும்
நீயும் அதை நம்பி
பெருங்கவலையோடு
எனைத் தாங்கினாயே!

கருவறையிலிருந்து வெளியே வர
பெண்பிள்ளை என்ற செய்தி கேட்டு
அளவிலா சந்தோஷப்பட்டாயே!
பத்து மாத கவலையையும்
மறந்து எனை ஏந்தினாயே!

வேளையில் உணவூட்டுவாய்
இல்லை என்றால் கவலையடைவாய்
இருக்கும் போது புரியவில்லை
இப்போது தவிக்கிறேன்
உன் ஒரு பிடி சோற்றுக்காய்

தோழிகளாய் இருந்து
கதை பேசினோம்
எமக்குள் அனைத்தையும்
அள்ளியிறைத்தோம்

கஷ்டம் என்றால் கட்டியணைப்பாய்
கவலை என்றால் தீர்த்து வைப்பாய்



கவலை என்றால் தீர்த்து வைப்பாய்
உன் மடி மீது சாய்ந்து
சிலநிமிடம் பேசினால்
அனைத்தும் மறக்கிறது
என்னவென்று சொல்ல

இன்று கவலை என்றாலும்
கஷ்டம் என்றாலும் எனக்குள்ளே
வைத்தழுகிறேன்
ஆறுதலுக்கு நீ இல்லை

தப்பும் செய்திருப்பேன்
உனை கஷ்டமும் படுத்தியிருப்பேன்
அனைத்தையும் மறந்து
எனைத் தங்கமென தாங்குகிறாயே!


வீழ்ந்தாலும் தாங்கிப் பிடிக்கும்
என் உயிரே! - உனை
வீழ விட மாட்டேன்
எப்போதுமிருப்பேன்
உன் பிள்ளையாய் நானே!

**AINI FARAH .HM**
A/L First Year

நூலாய்வு:-

வெலிகம ரிம்ஸா முஹம்மத்
(Dip.In.Journalism)

# ஹீரா இசை அமுதம் (ஞான கீதங்கள்)



தென்னிலங்கையில் விரல் விட்டு எண்ணக்கூடிய எழுத்தாளர்கள் வரிசையில் இறை ஞானிகளின் நேசரான, ஸூஃபி கவி எம்.டப்ளியு.எம். றியாழ் அவர்களும் இணைந்து கொள்கின்றார் என்பதில் தென்னிலங்கையைச் சேர்ந்தவள் என்ற வகையில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். றியாழ் ஆசிரியர் அவர்களும் நானும் வெலிகமையைச் சேர்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக ஒரே தெருவில் (புதிய தெரு) வசித்து வந்தவர்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி.

இவர் வெளியிட்டுள்ள 'ஹீரா இசை அமுதம் (ஞான கீதங்கள்)' என்ற இந்த நூல் அஸ்ஸித்தீகீ மலர் மன்றத்தினால் 63 பாடல்களை உள்ளடக்கிய வகையில் 70 பக்கங்களில் வெளியீடு செய்யப் பட்டுள்ளது. இந்த நூலில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான பாடல்களை இனிமையான பழைய, இடைக்கால தமிழ் சினிமாப் பாடல்களின் மெட்டிலும் மற்றும் சிலவற்றை ஹிந்திப் பாடல்களின் மெட்டிலுமே நூலாசிரியர் எழுதியுள்ளார். மெட்டுக்களின் இராகம் மாறாமலும் சந்தம் பிசகாமலும் இவர் யாத்துள்ள இந்தப் பாடல்கள் மிகுந்த இரசனைக் குரியதாக அமைந்துள்ளன என்பதைப் பாராட்டியாக வேண்டும்.

தமிழ் இலக்கியத்தில் பாடல்கள், கீதங்கள், இசைநயம் கொண்ட படைப்புகள் போன்றவை மனித மனதிற்குள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. இத்தகைய சிறப்புகளைக் கொண்ட பாடல்களைத் தாங்கி வெளி வந்திருக்கும் பனுவலாகவே இந்த நூலைக் குறிப் பிடலாம். பாடல்களின் வரிகளைப் பொதுவாக நோக்கும் போது நூலாசிரியரின் இலக்கிய ஆர்வம், கற்பனையாழம், ஆன்மீகச் சிந்தனை, தமிழ் மொழி மீதுள்ள பற்று,

இத்துறைகளில் அவருக்குள்ள விருப்பம் போன்றவை வெளிப்பட்டு நிற்கின்றன.

இந்த நூலின் தனிச் சிறப்பு இசைநயமாகும். ஒவ்வொரு பாடலும் எளிதாக பாடக் கூடிய வகையில் பழைய பாடல்களின் மெட்டில் எழுதப்பட்டுள்ளன. பாடல்களின் ஓசை, ஒத்திசை, சொல் இனிமை போன்றவை வாசகனை ஈர்த்து, பாடல்களை மெட்டுக்கு ஏற்ப பாடும் போது இன்பம் தருவதாக அமைகின்றன. பாடல்களில் வெளிப் படும் உணர்ச்சிகளான பக்தி, அன்பு, ஏக்கம், நம்பிக்கை, அமைதி - அனைத்தும் மனதைக் கவர்கின்றன. வாசிக்கும் போது மட்டுமல்ல, பாடும் போதும் அந்த உணர்வுகள் ஆழமாக அனுபவிக்கப்படுகின்றன. பாடல் வரிகளை எளிமையான சொற்களாலும் ஆழமான சிந்தனைகளையும் வெளிப்படுத்தி அமைத்திருப்பது எழுத்தாளரின் திறமைக்குச் சான்றாகும். பாடல்கள் கவிநயம் கொண்டதால் அவை இலக்கியச் சுவையையும் வாசகனுக்கு அளிக்கின்றன.

பாடலாசிரியர் றியாழ் அவர்களின் நூலில் இடம்பிடித்துள்ள 63 பாடல்களில் ஒரு சில பாடல்களைத் தொட்டுக்காட்டி ஹீரா இசை அமுதத்தில் நனைய வாசகர்களையும் அழைத்துச் செல்கின்றேன்.

'மண்ணில் வந்த நிலவே என் மடியில் பூத்த மலரே' என்ற பாடலின் மெட்டில் நூலின் முதலாவது பாடலாக அமைந்துள்ள 'மண்ணில் வந்த ஒளியே இறை ஒளியில் பூத்த மலரே' என்ற பாடல் வரிகள் தாஹா நபிக்கான தாலாட்டாக எழுதப்பட்டுள்ளது. தாஹா நபியை 'மண்ணில் வந்த ஒளி' எனக் கொண்டாடி, இறைவனின் அருளால் பிறந்த தூய்மையான மலராக சித்தரிக்கின்றது இந்தப் பாடல் வரிகள். மட்டுமல்லாமல் நபி (ஸல்) அவர்களின் பிள்ளைப் பருவத்தை விண்மீன்களும் மேகங்களும் தாலாட்டுகின்றன என்று பாடலாசிரியர் அழகாக வர்ணித்துள்ளார். நபியின் அழகு, நறுமணம், அருள் அனைத்தும் உலகிற்கு தெய்வீக ஒளியாய் விளங்குவதாகக் குறிப்பிட்டு இறைவன் அளித்த அருளும் அழகும் நபியின் உருவத்தில் ஒளிர்வதாக வெளிப்படுத்தியுள்ளார். இப்பாடலின் பல்லவி, சரணம் 1 ஆகியவற்றைத் தருகின்றேன்.

**மண்ணில் வந்த ஒளியே**
**இறை ஒளியில் பூத்த மலரே - 2**
**அன்பு கொண்ட அன்பின் ஒளி**
**கண்ணில் எங்கும் மின்னும் ஒளி**
**ஒன்றன்றோ**
**இறையே அருளே**
**இறையே அருளே அருளின்**
**ஒளியே ஒளியின் விளக்கே**
**(மண்ணில்)**

எட்டி நிற்கும் வானம் பக்கம் வந்து நின்று
பிள்ளையினைத் தாலாட்டும்
விண்ணின் குளிர் மேகம் பக்கம் வந்து நின்று
பிள்ளையினைச் சீராட்டும் - 2
விழிகளில் ஒளிமயம் உடலினில் நறுமணம்
இங்கே நூராகும்
உறங்கிடும் வரையினில்
அன்பின் தாய்மடி
மகிழ்ந்திடும் சேயாகும்
இறையே அருளே
இறையே அருளே அருளின்
ஒளியே ஒளியின் விளக்கே
(மண்ணில்)

*அடுத்து பக்கம் 13 இல் இடம் பிடித்துள்ள 'நான் ஒரு சிந்து காவடிச் சிந்து' என்ற மெட்டிலமைந்த 'நான் ஒரு வித்து ஏகனின் சொத்து' என்ற பாடல் மனித வாழ்வின் நிலையின்மை, ஆன்மீகத் தேடல் மற்றும் இறை அருளின் அவசியத்தை சிந்திக்க வைக்கிறது. உலகப் பயணத்தின் அர்த்தமறியாமை, அறிவின் வரம்பு, ஆன்மாவின் நிலையைக் கண்டு பிடிக்கும் தேடல் ஆகியவை கவியுணர்வாக ஒலிக்கின்றன. இப்பாடல் மெட்டில் ஒலிக்கும் ஓசை பாடலைப் பாடும்போது ஒரு வகையான உற்சாகத்தைத் தருகிறது. வாழ்வின் ஆழமான கேள்விகளை எளிய கவிப்பாங்கில் வெளிப்படுத்திய சிந்தனைப் பாடல் இது வெளிப்படுகின்றது.*

நான் ஒரு வித்து ஏகனின் சொத்து
ஞானம் தெரியவில்லை
இந்தக் கோலம் புரியவில்லை
மண்ணில் இருந்தும் வானில் பறந்தும்
அர்த்தம் புரியவில்லை
அதை எண்ண அறிவுமில்லை
(நான் ஒரு வித்து)

நில்லாத உலகிற்கு என்னென்ன பேரோ
நாடோடி வாழ்வுக்கு நானிங்கு யாரோ
மண்ணோடு போராடும்
அலையாட்டம் பாரு
நிலையாத வாழ்விற்கு
விதைபோட்ட யாரு?
தேடிப் படிச்சா சந்நிதி உண்டு
ரூஹூக்குள்ளேயும் சங்கதி உண்டு
கண்டுபிடி...
(நான் ஒரு வித்து)

*பக்கம் 35 இல் இடம்பிடித்துள்ள 'உறவுகள் தொடர்கதை உணர்வுகள் சிறுகதை' என்ற பாடலின் மெட்டில்*

அமைந்த ‘வரவுகள் தொடர் நிலை முடிவுகள் மறு நிலை’ என்ற பாடல் வாழ்வின் வரவுகளும் முடிவுகளும் சுழற்சி போல தொடர்வதைக் கூறுகின்றது. மனத்துயரமும் பல துன்பங்கள் வந்தாலும் அதைத் தாங்கி கடந்து செல்லும் வலிமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகிறது. ஒவ்வொரு முடிவும் புதிய தொடக்கம் என்பதையும் வாழ்க்கையின் துயர நிலைகள் இன்பம் நோக்கி செலுத்தும் என்பதையும் காட்டுகிறது. துன்பத்தைக் கடந்து இன்பம் பிறக்கும் என்ற நம்பிக்கையை இப் பாடல் வரிகள் உறுதிப்படுத்துகிறது.

வரவுகள் தொடர்நிலை
முடிவுகள் மறுநிலை
ஒரு நிலை என்றும் முடியலாம்
முடிவிலும் நன்மை தொடரலாம்
இது எல்லாம் சுகமே (வரவுகள்)

பக்கம் 45 இல் இடம்பிடித்துள்ள ‘நெஞ்சம் மறப்பதில்லை அது நினைவை இழக்கவில்லை’ என்ற மெட்டில் அமைந்துள்ள ‘என்றும் நிலைப்பதில்லை புவி நிலையும் நிலைப்பதில்லை’ என்ற பாடல் உலகின் நிலையாமையை உணர்த்துகிறது. மனிதன் வாழ்வில் பொய்மையும் துன்பமும் நிலையானவை அல்ல என்பதைக் கூறுகிறது. உண்மையான அமைதி என்பது இறைவனிடமிருந்து மட்டுமே கிடைக்கும் என்று வலியுறுத்துகிறது. இறைவனைத் துதித்து வாழும் வாழ்க்கையில் சோகம், மாயை எதுவும் இருக்காது என்று இப்பாடல் சிறப்பாக அறிவுறுத்துகிறது.

என்றும் நிலைப்பதில்லை
புவி நிலையும் நிலைப்பதில்லை
நாம் வாழ்ந்து வந்தோம்
பொய்யில் வீழ்ந்திருந்தோம்
மனதிலும் சாந்தியில்லை
எம் மனதிலும் சாந்தியில்லை
(என்றும் நிலைப்பதில்லை)

வான் மறை கூறும் அறிவினைத்
தேடி
கலங்கும் நல் மனமே
மனச் சாந்தியையும் மன
அமைதியையும் - நாம்
பெறுவது அதனிடமே - என்றும்
நாம் பெறுவது அதனிடமே
(என்றும் நிலைப்பதில்லை)

நூலாசிரியரின் சில பாடல்களுக்கு இசை வடிவமும் சேர்க்கப்பட்டு பாடலுக்கான கனதியை ஏற்படுத்தியுள்ளது. பாடல் வரிகள் வரிகளாக மட்டுமில்லாமல் இசை சேர்க்கப்பட்டு சிறந்த பாடகர்களால் பாடப்படும் போதே அவை முழுமையாகக்

கேட்போரைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் பெறுகின்றன. இந்தப் பனுவலில் உள்ள நூலாசிரியர் றியாழ் அவர்களின் பல பாடல்களை மீலாத் நிகழ்ச்சிகள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் பல உள்நாட்டுப் பாடகர்கள் பாடியுள்ளார்கள். மட்டுமல்லாமல் இந்தியா தமிழ்நாட்டு 'சுப்பர் சிங்கர்' இசைப் போட்டியில் தெரிவான பிரபலமான பாடகி பரீதா பேகம் அவர்கள் நூலாசிரியரின் 'யாரது சொல்லாமல் நெஞ்சள்ளி போவது', 'மேகமே மேகமே பால் நிலா தேயுதே', 'நெஞ்சம் மறப்பதில்லை அது நினைவை இழக்கவில்லை' ஆகிய மெட்டுக்களில் அமைந்துள்ள மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். மிகவும் இனிமையான குரலில் பாடப்பட்டுள்ள இந்தப் பாடல்களைக் கேட்கும் போது மனதுக்கு இதம் தருவதாக அமைகிறது. இதற்காக பாடகி பரீதா பேகத்தையும் இந்த இடத்தில் பாராட்ட வேண்டும்.

மொத்தத்தில் 'ஹீரா இசை அமுதம் (ஞான கீதங்கள்)' என்பது பாடல்களால் ஆன்மீகத்தையும், இசையால் நெகிழ்ச்சியையும், ஞானத்தால் சிந்தனையையும் தரும் ஓர் அரிய படைப்பாக அமைந்துள்ளது. இது வெறும் பாடல்களை உள்ளடக்கிய நூல் மட்டுமல்ல. வாசகனை ஆன்மீகப் பயணம் நோக்கி அழைக்கும் விதமாகவே இந்நூல் அமைந்துள்ளது. எனவே வாழ்க்கை வழிகாட்டியாகவும் இந்நூல் அமைகின்றது. எனவே இப்படைப்பு வாசகனின் மனதில் மகிழ்ச்சியையும் இறை பக்தியையும் ஊட்டும் படைப்பாக என்றும் நிலைத்து நிற்கும்.

80 வயதுகளைக் கடந்த நிலையில் இருக்கும் தனது தந்தை றியாழ் அவர்களின் பாடல்கள் அனைத்தையும் தொகுத்து நூலாக்கும் முயற்சியில் ஈடுபட்ட மகனார் எம்.ஆர். ஸபீர் அஹமத் அவர்களும் இந்த இடத்தில் பாராட்டப்பட வேண்டியவரே. ஏனெனில் இவருடைய இந்த முயற்சியின் விளைவாகவே ஓசை நயம் கொண்ட கவித்துவமான அழகிய பாடல்களை எமக்கு நுகரக்கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது. பாடலாசிரியர் றியாழ் அவர்களின் முயற்சிகள் யாவும் வெற்றி பெறவும், அவருடைய தேக ஆரோக்கியதுக்காக பிரார்த்தனை செய்வதோடு எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்!!!

**நூல் - ஹீரா இசை அமுதம்**
**நூலின் வகை - ஞான கீதங்கள்**
**நூலாசிரியர் - ஸூஃபி கவி எம்.டப்ளியு.எம். றியாழ்**



**வெளியீடு - அஸ்ஸித்தீக் மலர் மன்றம்**
**விலை - 300 ரூபாய்**

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "ஒட்டகச்சிவிங்கி பொம்மை" நூல் வெளியீடு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ல்ஒட்டகச்சிவிங்கி பொம்மைல் நூல் வெளியீடு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஏறாவூர் அஹமட் பரீட் நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏறாவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி, கவிதாயினி டாக்டர் திருமதி ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதிய

'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' மழலைப்பாடல் நூலின் வெளியீட்டு விழா கடந்த 19/11/2025 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு அஹமட் பரீட் நூலக பொறுப்பாளர் பி.என்.எப் றிஸாதா அவர்களின் தலைமையில் நூலக வளாகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக ஏறாவூர் நகரசபை கௌரவ தவிசாளர் அல்ஹாஜ் எம்.எஸ். நழீம் அவர்களும், கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில், நகரசபை பிரதி தவிசாளர் ஞா. கஜேந்திரன், கௌரவ உறுப்பினர் என்.எம். சரீனா, சனசமூக உத்தியோகத்தர் ஏ. ஹாறூன், ஆசிரியை என்.எம் ஆரிபா, நூலகர் திருமதி ஹப்சா மஜீத், நூலக விடய உத்தியோகத்தர் ஏ.ஆர். சஞ்சீதா, கலாசார உத்தியோகத்தர் எம்.எம். மக்பூல், நூலக உத்தியோகத்தர்கள், கவிஞர்கள் மற்றும் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வினை கவிஞர் எஸ்.எம். அமீன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் இதுவரை 'சிறகு முளைத்த மீன்', தூரிகை வரையும் மின்மினிகள், மற்றும் மஞ்சள் மாம்பூ என இரு ஹைக்கூ கவிதை நூல்கள் ஆகியவற்றை வெளியிட்டு, தமது நான்காவது படைப்பாக 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' எனும் மழலைப்பாடல் நூலை வெளியிடுவதில், தான் மகிழ்ச்சியடைவதோடு , இவர் வைத்தியத் துறைக்கு அப்பால்,

தமது படைப்பாற்றல் மற்றும் எழுத்துத் திறனின் மூலம்

ஓய்வு நேரங்களை சிறப்பாக பயன்படுத்தி இவ்வாறான படைப்புகளை உருவாக்குவது எமது ஊருக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும் என கௌரவ தவிசாளர்

அல்ஹாஜ் எம்.எஸ். நழீம் அவர்கள் தனது உரையில் பாராட்டுத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்தோடு, வருகை தந்த அதிதிகளுக்கு டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' நூலை வழங்கி வைக்க, பாடசாலை மாணவர்களால் அதிதிகளுக்காக அழகிய கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப் பட்டன.












# ஒரு குளத்தின் ஆயிரம் நத்தைகள்

**************************

ஒடிந்த சிறகில் எழுதுகிறது பறவை
அதன் பூமிக்குரிய எல்லைகளை

**************************

கிளையில் நகம் ஊன்றிக் கிள்ளிக் கிளம்பும்
குஞ்சுப் பறவையின் முதல் நிலம் தொடுதலே
பிரபஞ்சத்தின் விதி

**************************

வேட்டையாடப்பட்ட பறவையின்
தொண்டையில் சேமிக்கப்பட்ட
புழு, பூச்சி சொல்கிறது
உலகின் இரக்கமற்ற விதிகளின் நியாயத்தை

**************************

இரையின் நிழல் அசைவையும் கூர்ந்து நோக்கும்
கழுகின் கண்ணுக்குள்
ஒரு எறும்பும்
யானை அளவே

**************************

அடைகாக்கும் தாய்ப்பறவையின்
தூக்கத்தில் அடங்கியுள்ளது
உலகின் முதல் பாதுகாப்புச் சட்டம்

**************************

ஆழ வேரிறங்கும் ஆலமரத்துக்குத் தெரியும்
நிலமகள் பொறுமையின் கடைசி எல்லை

**************************

காய்ந்து வெடித்த நிலத்தின் விரிசலுக்குள்
ஒளிர்கிறது தொலைந்த தாகத்தின் துளி

**************************

அடிவானக் கோட்டில் பூமி குத்திட்டு நிற்கிறது
அதன் அத்தனை வருடப் பாரத்துடன்

**************************

**நோவா லைஸ்**

துளிப்பாக்கள்



# இயற்கை சீற்றம்

சுழன்று வீசியக்காற்று
சீற்றமாய் அழித்தது
தப்பிட முடியாமல் மரணம்
தாவியே அணைத்தது

மனிதநேயம் மரணிக்க வில்லை
மறைந்தே வாழ்ந்துள்ளது
மனித புனிதர்களின்
சேவை மகிமையானது.

இயற்கை அனர்த்தம்
இளகிய இதயங்களை
தரம் காணச் செய்தது
தயாளக் குணத்தோடு.

இறைக் கட்டளை நிராகரிப்போர்
நிச்சயம்
இறைகோபத்தை காண்பர்
அச்சமூட்டி எச்சரிப்பதில்
அடங்கியதே இச்சீற்றம்.

இயற்கை அழகானது
இன்பம் தரவல்லது
இதுவொரு பக்கமானது
இன்றானது மறுபக்கம்.

குறைகள் குவிந்திருக்கு
கறைபடிந்த வாழ்வோடு
திருந்தி வாழும் வரை
தாண்டவமாடும் சோதனைகள்

உன்னில் குறைநீக்கு
ஏகவனின் கருணையோடு
வையகம் வாழ்வாய்
வந்திடும் நிம்மதியுடன்

இதயம் அழுது
இறைவனிடம் கரமேந்திடு
இவ்வாறான அழிவு
இனியும் வேண்டாமென

பிரார்த்தனை கனமானது
பிரிந்த உறவுகளுக்காய்
பரிந்து வேண்டுவோம்
சுவனத்து சொத்தாகட்டும்

வேதனைகள் விலகாது
வலிகளோடுத் தொடரும்
இழந்த சொத்துக்கள்
மறைந்த உறவுகளோடு

இனியும் வேண்டாம்
இவ்வாறான அழிவு
இறைவா காத்திடு
இறைஞ்சி கேட்கின்றோம்

இறையடிமை
**எஸ்.யூ.கமர்ஜான்பீபீ**
வத்தளை

# எச்சரிக்கை

எச்சரிக்கை, அச்சுறுத்தல் என நம் செவிகளுக்குள் நுழையும் எல்லா விடயங்களையும் நாம் அலட்சியப்படுத்(தியதால்)துவது எவ்வளவு பெரிய பின் விளைவுகளை சந்தித்து விட்டோம் என்பதை அனுபவத்தில் அறிந்து கொள்ளத்தான் அகோரத்தாண்டவம் ஆடியதோ இந்த தித்வா புயல்.

உலக முடிவு (மஹ்ஸர்) எப்படி இருக்கும் என அதிரடியாய் ஒரு சிறு ஊசலாட்டம் காட்டி விட்டு அமைதியாகிவிட்டதே இந்த தித்வா.

'பாலூட்டிக் கொண்டிருக்கும் தாய் தன் குழந்தையை தவற விட்டு விடுவாள்.'

'கருவில் இருக்கும் குழந்தை தானாகவே வெளியேறிவிடும்.'

'மலைகள் பெயர்ந்து துகள், துகள்களாக மண்ணோடு மண்ணாக கலந்து விடும்.'

'பூமி பிளந்து விடும்'

'மரங்கள் வேரோடு பிடுங்கப் பட்டு விடும்'

'பூமியே புரட்டிப் போடப்பட்டு ஊரே இருந்த இடம் தெரியாமல் ஆகிவிடும்.'

இவையெல்லாம் அல்குர்ஆன் நமக்கு விடுக்கும் எச்சரிக்கைகள்.

இந்த தித்துவா புகட்டிய பாடத்தில் இவையெல்லாம் வரலாற்றுப் படிமங்களாகி விட்டதே.

ஒவ்வொரு சமூகங்கள், அளிக்கப் பட்ட வரலாறுகளும் காரண காரியங்களுடன் திருமறையில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

நமது நாவுகள் அவற்றை அனுதினமும் உச்சரித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

ஒவ்வொரு விடயங்களையும் விளக்கும் போதும் இறைவனால் (இன்சான்) மனிதன் சிந்தித்து உணர வேண்டாமா? என எச்சரிக்கை செய்யப்படுகின்றான்.

அந்த எச்சரிக்கையை நாம் அலட்சியப்படுத்தி விட்டோமா?

அது நிகழ்ந்து விட்டால்..'எங்கள் கேடே! எங்களுக்கு என்ன நடந்தது!' என மக்கள் பதட்ட மடைந்தவர்களாக தப்பிக் கொள்ள வழியை தேடுவார்கள்!

எங்கேதான் ஓடுவது?

யார் யாரைப் பார்ப்பது?

கண் முன்னே அழிந்து கொண்டிருக்கும் எதைத்தான் காப்பாற்றுவது?

இதுதான். இதுதான் மஹ்ஸரின் நிலை என்ற எச்சரிப்பு நமது உள்ளங்களை நடு, நடுங்கிப் போகத்தான் செய்துவிட்டது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை மரங்களும், மனிதர்களும், மிருகங்களும் வேகமாக சீறிப்பாயும் நீரோடு அடித்துச் செல்லப்படும் அந்த பயங்கர காட்சி தானே கண்ணுக்குத் தெரிகின்றது!

வீட்டுக் கூரைகளிலும், மரங்களிலும், உயரமான பகுதிகளிலும், நீரில் அடித்துச் செல்லப்படும் மிதக்கும் பொருள்களில், ஏதாவது ஒன்றை துரும்பாக பிடித்துக் கொண்டு காப்பாற்றக் கோரும் அவலக் குரல்களும், மரண ஓலமிடும் குரல்களும் தானே எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

அந்த பயங்கரமான நேரத்திலும் மனிதாபிமானம் உள்ள மனிதத் துவங்களைக் கொண்டு வல்ல ரஹ்மான் எவ்வாறு அதிலிருந்து சிலரை மீட்டெடுத்தான் என்பதும் நினைத்துப் பார்க்க முடியாத ஆச்சரியம் அல்லவா? சுபஹானல்லாஹ்!

ஆனாலும் சிலருக்கு உலக முடிவு என்பது உறுதியாகித்தான் போய் விட்டது.

அவர்கள் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மற்றவர்களுக்கு உதவுவதற்காக ஒவ்வொருவருடைய உள்ளங்களும் வெளிப்படுத்திய அன்பு மிகப் பெரியது.

இறைவனிடத்தில் அத்தனையுமே மிகப் பெறுமதியானது.

தன்னுயிரை துச்சமாக மதித்து பிறர் உயிரை வெள்ளத்திலிருந்து காப்பாற்ற முனைந்த எத்தனை எத்தனை அன்புள்ளங்கள்! காப்பாற்ற போய் தன்னுயிரை இழந்தவர்கள் எத்தனை பேர்.

உணவும், நீரும், உடுக்க உடையும், மருந்துகளும், அடிப்படை வசதிகளும் தேடித் ,தேடி வழங்கியோர் எத்தனை பேர்.

இடிபாடுகளிலும், சேறுகளிலும் சிக்கிக்கொண்டோரை நாள் கணக்கில் மீட்டெடுத்தோர் எத்தனை பேர், தன்னிடம் இல்லாவிட்டாலும் இருப்போரிடம் இரந்து கையேந்தி குழுக்களாகவும், தனியாகவும் ஓடி ஓடி உதவியோர் எத்தனை பேர்

நீங்கள் நலமாக இருக்கிறீர்களா;

உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருக்கிறதா? என கொஞ்ச நேரம் கிடைத்த அலைபேசி கவரேஜிலும் அன்போடு விசாரித்த அன்புள்ளங்கள் எத்தனை பேர்?..

அத்தனை பேருக்கும் இன்ஷா அல்லாஹ் இறைவன் மிக அழகிய சுவனக் பதிகளை வைத்திருக்கின்றான்.

அனைவருமே இறை அன்பையும், மனித அன்பையும், சம்பாதித்துக் கொண்ட வெற்றியாளர்கள்

வாயில்லா ஜீவராசிகளும் காட்டு மிருகங்களும் தங்கள் இருப்பிடங்களை இழந்து வாழ்விடங்களைத் தேடி தடுமாறி தத்தளிக்கின்ற நிலையில் அவைகளையும் காப்பாற்றி உணவு கொடுத்து ஆதரவு காட்டிய அன்பானவர்களும், நம்முள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அனைத்துமே நிகழ்ந்து முடிவுற்ற பின்னர் எனது தாய் தந்தை எங்கே?... எனது சகோதரர்கள் எங்கே?.. எனது அன்பான காதல் மனைவி எங்கே?.... நான் பல வருடங்கள் கழித்து மிக சிரமப்பட்டு பெற்றெடுத்த குழந்தை எங்கே?... திருமணம் முடிக்க பேசி வைத்திருந்த எனது எதிர்கால கணவனோ மனைவியோ எங்கே?...

நான் பல வருடங்கள் உழைத்த உழைப்புகளும் சொத்துக்கள் உடமைகளும் எங்கே?

புதிதாகக் கட்டிய வீட்டில் பதிக்க வைத்திருந்த வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட சலவை கற்கள் எங்கே?

நான் சிறுக சிறுக சேமித்துக் கட்டிய கனவு இல்லம் எங்கே?, எனது அன்பளிப்பு பொருட்கள் ஞாபக சின்னங்கள் எங்கே?, எனது பண்ணை விவசாயம் எங்கே?

எனது கடைகளும் பொருட்களும் எங்கே?

எனது பாடசாலையும், கல்வி கற்கும் புத்தகங்களும் எங்கே?

எனது விளையாட்டு பொருட்கள் எங்கே?

நான் வாழ்ந்த ஊரும் வீடும் எங்கே?

இவைகளெல்லாம் எனக்கு மீள கிடைக்குமா?

காணாமல் போன உயிருக்கு உயிரான உறவுகள் எங்கேயாவது இருந்து வருவார்களா?

இன்று இந்தக் கேள்விகளுக் கெல்லாம்விடை தேடிக்கொண்டிருக்கும் நொந்து போன உள்ளங்களுக்கு அவன் தந்ததை, அவனே பெற்றுக் கொண்டான். இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமில்லை நாம் எல்லோருமே பயணிகள். ஒரு நாள் நம் பயணமும் முடிய தான் போகிறது. அதுவரை பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் இவ்வுலக வாழ்வில் பயணிப்போம்.

இழந்த அத்தனையுமே இறைவன் நாட்டப்படியே நடந்தது என்பதை பரிபூரணமாக நம்புவோம். இதைவிட பல மடங்கு நன்மைகளை நலவுகளை இறைவன் நமக்கு தருவான் என உறுதியாக நம்புவோம். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்போடும் உதவியோடும் இருப்போம்.

இன்ஷா அல்லாஹ்

எல்லாவற்றையும் தைரியத்தோடு எதிர்கொள்ளும் வல்லமையை அனைவருக்கும் இறைவன் வழங்க வேண்டும் என பிரார்த்திப்போம்.

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்**
**கிண்ணியா**

# காதலின் உயிரோசை

எண்ணமெனும் மேடையிலே
இசைக்கும் என்னவளே
கன்னலாய்ப் பாட்டிசைக்கும்
பாடகியும் நீதானே
கன்னக்குழி ஓரத்திலே
கயல்மீனும் நீந்தயிலே
உள்ளமெனும் முற்றத்திலே
உயிரோசை கேட்குதடி

மழைத்துளியின் ஓசையிலே
மாயமாய் வந்தவளே
மல்லிகைப்பூ மணம்போல
உயிரினில் கலந்தவளே
தென்றலுமே பாடாதத்
தெம்மாங்கு ராகத்திலே
தேன்மதுர பல்லவியை
திகட்டாமல் வடித்தாளே

உயிருக்கும் உடலுக்கும் உள்ளதா தூரம்
உண்மையான பக்தியே
ஓயாமல் நீளும்
அன்பினது உணர்வை
அறியவா முடியும்
அழியாது வாழுமே நம்
தெய்வீககானம்

கட்டிளம் பருவமும்
காதலரின் மோகமும்
காற்றிலே கலந்து
கருவறையில் சேரும்நெற்றிலே மலர்ந்த
நிலையான பிரவாகம்
நெஞ்சமே நீதானே
உயிரின் தனிராகம்

தேசிய கலைஞர் கலைச்சுடர்
காவத்தையூர்
**பழனியாண்டி கனகராஜா**

# ஹைக்கூ கவிதைகள்

1.
கடந்து
செல்லவேயில்லை
மக்கள் நடக்கும்
பாதையை
அந்த  உதிர்ந்த இறகு

2.
சூரியனைக்
காணவேயில்லை
இன்னும் இருட்டாக கிடக்கிறது
ஓவியத்தில் ஆகாயம்

3.
நேரில்
காணவேயில்லை
வரைபடத்தில் மட்டுமே
தெரியும்
வற்றாத   நதிகள்

4
அடிப்பது   நிற்கவேயில்லை
எத்தனை
கற்களை  வீசியும்
கடலில்  அலைகள்

5.
ஏறவே முடியவில்லை
குளியலறை
கண்ணாடிச்
சுவற்றில்
மழைக்கால நத்தை

6.
சகுனம்
சரியில்லை
அடிபட்டு இறந்து கிடக்கிறது
குறுக்கே வந்த பூனை

7.
விழுந்ததும்
இறக்கவில்லை
ஓடும்
காட்டாற்று  நீரில்
பறவையின்
பிம்பம்

8மீ
யாருமே
கலைக்கவில்லை
துறவிகளின்
அமைதியான
கூடாரத்தில்
குருவிக்   கூடு

9.
சாதிகள் பார்ப்பதில்லை
ஒன்றாகக்
கூடித்   திரியும்
அந்த  வானத்துப்
பறவைகள்

10.
நிமிர்ந்து   நீளவேயில்லை
எத்தனை ஆண்டுகள்
கடந்தும்
வளைந்த
வானவில்

**தமிழ்மாமணி**
கவி நிலா மோகன்
தஞ்சாவூர்
தமிழ்நாடு மாநிலம்
இந்தியா.

நூலேணி பதிப்பகம், அமெரிக்கத் தன்முனைக் கவிதைக்கூடம்
இணைந்து நடத்திய நூல் வெளியீட்டில்

# அமெரிக்கா, தமிழ்நாடு கவிஞர்களின் தன்முனைக் கவிதை நூல்கள் வெளியீடு



(இ-வ) கவிஞர் கண்மணி கண்ணன், கவிஞர் கன்னிக்கோவில் இராஜா, கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம், கவிஞர்கள் புதுகை ஆதீரா, அகவலன் மற்றும் வேலாயுதம்.ந

நூலேணி பதிப்பகம், அமெரிக்கத் தன்முனைக் கவிதைக்கூடம் இணைந்து நடத்திய நூல் வெளியீடு 22-12-2025 திங்கட்கிழமை மாலை சென்னை, மேடவாக்கத்தில் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் தன்முனைக் கவிதைகள் நூலகத்தில் நடைபெற்றது.

கவிஞர் கன்னிக்கோவில் இராஜா-வின் ‘தன்முனைக் கவி கார்த்திகை’, கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி-யின் ‘தன்முனைத் தளிர் கார்த்திகை’, பாவலர் கல்லை மலரடியானின் ‘தன்முனை மலர் கார்த்திகை’ நூல்களை கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் (நிறுவனர், தன்முனைக் கவிதைகள் குழுமம்) அவர்கள் வெளியிட, கவிஞர்கள் புதுகை ஆதீரா, அகவலன், வேலாயுதம்.ந ஆகியோர் பெற்றுக் கொண்டார். அருகில் கவிஞர் கண்மணி கண்ணன் மற்றும் கவிஞர் கன்னிக்கோவில் இராஜா

இந்நூலின் வெளியீட்டு விழாவில் கவிஞர் கண்மணி கண்ணன், திருமதி. அருள் சக்தி, கல்யாணசுந்தரம், திருமதி. விஜயலட்சுமி, கவிஞர் டாடோ செ.க.சந்திரகலா கவிஞர் குணசேகரன் கவிஞர் புதுகை ஆதீரா, கவிஞர் அகவலன், கவிஞர் வேலாயுதம்.ந, உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியைக் கவிஞர் கன்னிக்கோவில் இராஜா ஒருங்கிணைத்தார். தன்முனைக் கவிதை வரலாற்றில் மாதம் ஒருநூல் வரிசையில் ‘கார்த்திகை’ மாதத்தின் நூல்கள் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.



# பீற்றூட் செய்கை

பீற்றூட் ஆனது பீற்றா வல்காரிஸ் (Beta Vulgaris) என அழைக்கப்படும் கீனோபோடியேசி எனும் குடும்பத்தைச் சேர்ந்த மரக்கறி பயிராகும்.இது மேல்நாட்டு மரக்கறி பயிர்களில் ஒன்றாகும்.என்றாலும் பீற்றூட் செய்கைக்கான அனைத்து சாதகமான சூழலையும் சரியாக வழங்குவதன் மூலம் இன்றைய காலங்களில் இலங்கையின் எல்லா பிரதேசங்களிலும் பயிரிடக்கூடியதாக உள்ளது.

குளிரான, வெப்பமான காலநிலைக்கு இசைவாக்கம் அடைந்த பயிராகையால் இத நாட்டின் எப்பாகத்திலும் திருப்திகரமா செய்கைபண்ணலாம்.

**மண்:**

நன்கு நீர் வடிந்து செல்கின்ற, சேதனப் பொருட்களைக் கொண்ட மண் பீற்றூட் செய்கைக்கு மிக உகந்தது. பொதுவாக பீ.எச் இன் அளவு 6.3-7. 3 வரை இருப்பின் மிக நல்லது.

**சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்:**

**கிறிம்சன் குளோப்:**

இவ்வர்க்கத்தை 70-90 நாட்களில் அறுவடை செய்யலாம். பீற்றூட் கிழங்கின் வெளிப்புறம் சிவப்பு நிறமாகும். கிழங்கின் மையப்பகுதி செவ்வூதா நிறமாகக் காணப்படும்.

**டெற்றொயிட் டாக்றெட்:**

70-90 நாட்களில் அறுவடை செய்யலாம். கிழங்கின் நிறம் கிறிம்சன் குளோப் ஐ ஒத்தது.

**தேவையான விதை:**

ஹெக்டயரொன்றிற்க்கு 05 - 06 கிலோ ஆகும்.

**நாற்றுமேடைகளை அமைத்தலும், பராமரித்தலும்:**

சூரிய வெளிச்சம் நன்கு விழுகின்ற, நீர் தேங்கி நிற்காத இடத்தை இதற்கென தெரிவு செய்து கொள்ளவும். நிலத்தைப் புரட்டி ஒரு மீற்றர் அகலமான. 20 ச.மீ உயரமான பாத்திகளை அமைத்துக் கொள்ளவும். இப்பாத்திகளுக்கு நன்கு உக்கிய சேதனப்பசளைகளை இட்டு. மண்ணுடன் கலந்துவிடவும். விதைகளை நடுவதற்கு முன் நாற்றுமேடைகளைத் தொற்றுநீக்கம் செய்யவும்.

**நாற்று மேடை தொற்று நீக்கம்:**

உமி, வைக்கோல் என்பனவற்றைத் தட்டுகளாக இட்டு. மெதுவாக தீ வைத்தல், பங்கசு நாசினிகளை விசிறுதல், கடும் சூரிய வெப்பம் நிலவும் காலத்தில் நிறமற்ற பொலித்தீனால் மேடைகளை 2 கிழமைகள் வரை மூடி வைத்திருத்தல் என்பனவற்றின் மூலம் தொற்று நீக்கம் செய்யலாம்.

நாற்று மேடையில் 10 ச.மீ இடைவெளியுள்ள வரிசைகளில் விதைகளை நடவும். 4-6 கிழமை வயதானதும் சிறு கிழங்குகள் உள்ள நாற்றுக்களை நடுகை செய்யலாம். தயார் செய்யப்பட்ட தோட்டங்களில் நேரடியாக இதனை நடலாம்.

**நிலத்தைப் பண்படுத்தல்:**

செய்கை பண்ணவுள்ள தோட்டத்தை 20-30 ச.மீ ஆழம் வரை கொத்தி மண்ணைப் புரட்டி 20 ச.மீ உயரமான பாத்திகளை அமைக்கவும். நன்கு உக்கிய சேதன எருவில் 10 தொன்னை ஒரு ஹெக்டயருக்கு இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடவும்.

**நாற்றுக்களை நடல்**

நாற்றுக்களை நடுவதற்கு முன்னர் அடிக்கட்டுப் பசளையாக இட வேண்டிய இரசாயனப் பசளைகளைப் பாத்திகளுக்கு இட்டு நன்கு கலந்து விடவும்.

**நடுகை இடைவெளி:**

**உலர் வலயம்:**

வரிசைகளுக்கிடையே 30 ச.மீ. தாவரங்களுக்கிடையே 20 ச.மீ.

மலைநாட்டிற்கு: வரிசைகளுக்கிடையே 30 ச.மீ. தாவரங்களுக்கிடையே 15 ச.மீ

**நீர்ப்பாசனம்:**

மண்ணின் ஈரப்பற்றை அவதானித்து தேவைக்கேற்ப 3 - 4 நாட்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

**களைக்கட்டுப்பாடு:**

நாற்றுக்களைத் தோட்டத்தில் நட்டு 2 வது வாரத்தில், முதலாவது தடவை களைகளை பிடுங்க வேண்டும். இதன்பின் மேற்கட்டுப் பசளைகளை இட முன்னர் அதாவது



*4 வது வாரத்தில் தோட்டத்தில் களைகளை பிடுங்கவும்.*

**நாற்று மேடைக்கான பசளை சிபாரிசு:**

*05 சதுர மீற்றர் பரப்பளவுள்ள மேடை ஒன்றிற்கு 05 கிலோ யூரியா (Urea), 05 கிலோ மியூறியேற்றுப் பொட்டாசு (MOP) என்பனவற்றை முளைத்து 02 வது கிழமை இடல் வேண்டும்.*

**பீடைகளைக் கட்டுப்படுத்தல்**

**வெட்டுப் புழுக்கள்:**

*இவை நாற்றின் கழுத்துப் பகுதியைக் கடித்து சேதப்படுத்தும். தாக்கம் அதிகமாகக் காணப்படும் போது கார்போபியுரான், எடோபென்புரொக்ஸ், குளோர்பைறிபொஸ், புரோத்தியோபொஸ் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை சிபாரிசு செய்யப்பட்ட அளவு விசிறுதல் வேண்டும்.*

**நோய்கள்**

**நாற்றழுகல்:**

*நாற்றுக்கள் இரண்டு வார வயதை அடையும் வரை இந்நோய் ஏற்படும். நோய்க் காரணியான பங்கசு ஆணி வேரையும், வித்திலையையும் சேதப்படுத்துவதால், நாற்று வாடி இறக்கும். இதற்கு பங்கசு நாசினிகளான திராம், கப்ரான், ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை நாற்று மேடைக்கு விசிறவும்.*

**அறுவடை:**



*நாற்று நட்டு 75 - 90 நாட்களில் அறுவடை செய்யலாம்.*

**விளைச்சல்:**

*ஒரு ஹெக்டயருக்கு 12 - 15 மெ.தொன் விளைச்சலைப் பெறலாம்.*

*அறுவடைக்குப்பின்னரான முகாமைத்துவம்:*

*அறுவடை செய்த கிழங்குகளில் நன்கு முதிர்ச்சியடைந்த இலைகளை மாத்திரம் அகற்றிய பின் அல்லது எல்லா இலைகளையும் அகற்றிய பின் தேவைக்கேற்ப சந்தைக்கு அனுப்பலாம்.*

*காற்றோட்டம் இருக்கத் தக்கவாறு கயிற்றினால் ஆன சாக்கில் / பிளாஸ்டிக் கூடைகளில் சந்தைகளுக்கு கொண்டு செல்ல வேண்டும்.*

**ஆக்கம்:**

மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்

(விவசாய போதனாசிரியர் - ஏறாவூர் )

சம்மாந்துறை, இலங்கை.

# ஏக்கத்தின் பிரதிமையாய்...

கதைப்பதற்கு ஆளில்லாது விட்டால்
கலைந்து விடுவாயா
சிரிப்பதற்கு ஆளில்லா விட்டால்
சிதைந்து விடுவாயா

அன்பு செலுத்த ஆளில்லா விட்டால்
அணைந்து போவாயா
நட்பிக்க நல்லுள்ளம்
இல்லாவிட்டால் நலிந்து போவாயா

இந்த இதயம் புரிந்து கொள்ள
முடியாத பிறப்பு போல
எதிலும் முழுத்திருப்தி
பெறாத ஏக்கத்தின் பிரதிமையாய்

ஊக்கம் தந்தால் மட்டுமே
உன்னால் எழுந்திருக்க முடியுமா
அன்பில்லாது விட்டால்
அழுது விடுவாயா

உந்தும் மனிதரற்ற வேளை
உணர்வற்று மரத்துப்போவாயா
எத்தனம் இல்லாத் தருணம்
மரித்துப்போவாயா

ஏனிப்படி அன்பினால் ஆதிக்கம்
செலுத்தப்படுகிறாய்
வெறுமையான பொழுதுகளில்
சாதாரணமாய் உன்னால்
இருக்க முடியாதா
அன்பின் வறுமை தாக்கும் போது
பொறுமை காக்க முடியாதா

காலச்சதி சதிராடுகையில்
சலனமின்றி வாழ இயலாதா
அன்பின் பேரடிமையாகவே நீ
வாணாளைக் கடத்த வேண்டுமா

சரணடையாமல் உன்னால்
சாந்தி பெற முடியாதா
சகித்தலும் செரித்தலும்
சாதித்தலும் எதற்காக என்பதை
அறியாதவனா நீ
நேசத்தை சுத்தமாக விட்டொழிந்து
வாழ இயலாதா உன்னால்

எது கை விட்டாலும்
எழுந்திருக்க உன்னால் முடிய
வேண்டும்
உன்னை சிறுத்துக் கொள்வதிலும்
குறுக்கிக் கொள்வதிலும் இருந்து
முதலில் விலகு

உன்னை சிதைக்கின்ற
யாவற்றையும் உன்னிலிருந்து
அகற்று
கலக்கம் தருபவற்றை படியவைத்து
மெல்ல மேலெழு

கண்ணீரை வழித்தெறிந்து
காலத்தை கொஞ்சம் நகர்த்து
கடும்பாறையென வலிந்து
நெஞ்சம் இறுக்கு

அன்பு வேண்டும்தான்
ஆனால் நீ
வாழவும் வேண்டும்தானே!!

**Dr. ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்

# காட்சியழகும் சொற்செறிவுமே ஹைக்கூவின் சிறப்பு

**'ஹைக்கூ முற்றம்' நிகழ்வில் கவிஞர்கள் பகிர்வு**

சென்னை. டிசம்பர்.21. 'ஹைக்கூ முற்றம்' அமைப்பின் மாதாந்திர இலக்கிய நிகழ்வு, கோயம்பேடு எதிரேயுள்ள விக்டோரியா கார்டன் தரைத்தள அரங்கில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கவிஞர் உ.முத்துக்குமாரசாமி தலைமையேற்றார். கவிஞர் கோசின்ரா அறிமுகம் செய்து உரையாற்றினார்.

'ஹைக்கூவும் நானும்...' எனும் தலைப்பில் கவிஞர் கா.பாபுசசிதரன் உரையாற்றுகையில், 'ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூ இன்று உலகின் திசையெங்கும் பரவியிருக்கிறது. 2015-ஆம் ஆண்டில் எனது அலுவலகப் பணி நிமித்தமாக நான் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது, ஜப்பானியர்கள் ஹைக்கூ எனும் கவிதை வடிவம் மீது எவ்வளவு ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு வியந்து போனேன்.

1984-இல் கவிஞர் அறிவுமதி எழுதிய 'புல்லின் நுனியில் பனித்துளி' எனும் ஹைக்கூ கவிதை நூலைப் படித்த பின்னரே எனக்கும் ஹைக்கூ எழுதும் ஆர்வம் பிறந்தது. இன்றைக்கு தமிழில் ஹைக்கூ புரிந்தும், புரியாமலும் பலரும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். காட்சியழகோடும் மொழிச் செறிவோடும் எழுதப்படும் ஹைக்கூ கவிதைகளே சிறப்பான கவிதைகளாகப் பேசப்படும். காலங் கடந்தும் பேசப்படும். ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய புரிதலுக்கும் தெளிவுக்கும் இப்படியான சந்திப்புகளும் பகிர்வுகளுமே உதவி புரியும்' என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, தமிழ்க் கவிதையின் முன்னோடியும் 1985-ஆம் ஆண்டிலேயே 'சூரியப் பிறைகள்' எனும் ஹைக்கூ நூலினைப்

படைத்த மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பங்கேற்ற கவிஞர்கள் பலரும் ஹைக்கூ கவிதைகளை வாசித்தனர். சிறந்த ஹைக்கூ கவிதைக்குப் புத்தகப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வை கவிஞர் மு.முருகேஷ் ஒருங்கிணைக்க, கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

நிகழ்வில், கவிஞர்கள் சக்திமான் அசோகன், ஞால.ரவிச்சந்திரன், புதுகை ஆதிரா, அன்புத்தோழி ஜெயஸ்ரீ, பாளை கோ.மாணிக்கம், அனுராதா சௌரிராஜன், நயினார், பா.மகாலெட்சுமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

படக்குறிப்பு: சென்னையில் நடைபெற்ற 'ஹைக்கூ முற்றம்' நிகழ்வில் சிறப்பு

அழைப்பாளர்களாகப் பங்கேற்ற கவிஞர்கள் கா.பாபுசசிதரன், உ.முத்துக்குமாரசாமி ஆகியோருக்குப் புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டன. அருகில், கவிஞர்கள் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம், கோசின்ரா, மு.முருகேஷ்,அகவலன் ஆகியோர் உள்ளனர்.






## சிந்தனையும் செயலும் ஒன்றென இயங்கும்

# கவிஞர் மு.முருகேஷ்

தமிழகத்திலுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தின் நகரமும் கிராமமும் இணையும் பகுதியான வரலாற்றுச் சிறப்புடைய திருக்கோகர்ணத்தில் சொ.முத்தையா - மு.மாரிக்கண்ணு இணையரின் கடைக்குட்டிப் பிள்ளையாகப் பிறந்தவர் மு.முருகேசன். இவருக்கு சிறுவயதிலிருந்தே புத்தகம் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டானது.



தந்தை சொ.முத்தையா, தேசிய கட்சியான காங்கிரஸில் தன்னை இணைத்துக்கொண்டு, அது முன்னெடுக்கும் போராட்டங்களிலெல்லாம் கலந்துகொண்டவர். சுதந்திரப் போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

முருகேசனின் அம்மா மாரிக் கண்ணு, நல்ல குரல் வளத்தோடும் ஏற்ற இறக்கத்தோடும் கதை சொல்வதில் வல்லவர். கேட்பதற்கு அவ்வளவு சுவாரசியமாக இருக்கும்.

அம்மாவின் வழியாகக் கதை கேட்டுப் பழகிய முருகேசன், ஒரு கட்டத்தில் தானுமொரு கதை சொல்லியாக மாறினார். இது அவர் படித்த கோவில்பட்டி நகராட்சி துவக்கப்பள்ளியிலும் தொடர்ந்தது. நண்பர்கள் ஆளாளுக்குப் பத்து பைசா விதம் சேர்த்து, ஒரு கதைப் புத்தகத்தை வாங்கிக்கொடுக்க, அதைப் படித்துவிட்டு, சுவையாகக் கதைகளைச் சொல்லத் தொடங்கினார் மு.முருகேசன்.

தனது பக்கத்திலிருந்த சித்தப்பா வீட்டிலும், பாரிஜாதம் அக்கா வீட்டிலும் வாங்கிய ஆனந்த விகடன், குமுதம், ராணி வார இதழ்கள் முருகேசனின் வாசிப்பு ருசியைத் தூண்டிவிட்டன. பள்ளியில் படிக்கிற காலத்திலேயே 'ராணி' வார இதழுக்கு சிறுகதை ஒன்றை அனுப்பி வைக்க, 'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்' என்றனுப்பிய அஞ்சலட்டையைப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

கவிதைகளையும், சிறு கதைகளையும் எழுதி வந்த மு.முருகேசனின் முதல் கவிதை, கோவில்பட்டி பாரதி மன்றம் நடத்திய 'பார்வை' கையெழுத்து இதழில் வெளியானது. அந்த மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டியிலும் பரிசினைப் பெற்றார்.

தான் படித்த திருக்கோகர்ணம் அரசு உயர்நிலைப் பள்ளியின் பின்புறமிருந்த அரசுக்கிளை நூலகத்தில் உறுப்பினரானார். காலை, மாலையென இரு நூல்களை எடுத்துப் படித்து, நூலகரோடு இணக்கமான நண்பரானார்.

பத்தாம் வகுப்புப் படிக்கையில் தனது நண்பர்களது கல்லூரிகளில் படிக்கும் அண்ணன்களோடு இணைந்து 'விடியல்' எனும் உருட்டச்சு (ரோனியோ) இதழினைத் தொடங்கினார். அதில், கதை, கட்டுரை,தொடர் கதை என பலவற்றையும் எழுதினார். 'விடியல்' பிறகு அச்சிதழாக வளர்ந்து, பல நூறு பிரதிகள் விற்பனையாகின. இதழினைப் பதிவுசெய்யும் நோக்கில் மாவட்ட ஆட்சியரகம் சென்று மனு கொடுக்க, பதிவு எண் விசாரணைக்காக காவல் துறையினர் வீட்டிற்கு வந்து விசாரிக்கவே, அத்தோடு 'விடியல்' நின்றுபோனது.

படித்துவிட்டு ஆசிரியராக வேண்டும் என்கிற ஆர்வத்தில் இருந்த முருகேசன், பத்தாம்





வகுப்புப் பொதுத்தேர்வில் கணிதப் பாடத்தில் மாநில அளவில் முதலிடம் பெற்றார். இதனால் ஆசிரியர் கனவு நிறைவேறாமல், காரைக்குடியிலிருந்த அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் படிக்கும் சூழல் உருவானது.

'விடியல்' இதழின் மூலமாகக் கிடைத்த சிற்றிதழ் தொடர்பில், தமிழகம் முழுவதிலுமிருந்து வந்த பல்வேறு இதழ்களில் தொடர்ந்து எழுதத் தொடங்கினார். தனது பகுதியிலிருந்த சக வயதொத்த நண்பர்களைச் சேர்த்து 'பாவேந்தர் பாசறை' எனும் அமைப்பினை உருவாக்கி, அதன் செயலாளராகச் செயலாற்றினார். பின்னர் அதனையே 'முத்தமிழ் மன்றம்' எனும் பெயரில் மாற்றி, ஆண்டுதோறும் கவியரங்கம், பட்டிமன்றம், பாட்டுக் கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தினார். அவற்றில் தானும் பங்கேற்றார்.

இக்காலக்கட்டத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடனான அறிமுகம் கிட்டியது. அச்சங்கத்தில் இணைந்துகொண்டு, தொடர்ச்சியாக மாதாந்திர இலக்கியச் சந்திப்புகளை நிகழ்த்தினார். பல இலக்கியக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு பேசினார்.

'தீக்கதிர்' நாளிதழின் வாராந்திர இலக்கியப் பக்கமான 'வண்ணக்கதிர்' பகுதியில் திரை விமர்சனம், சிறுகதை, கவிதை, நூல் அறிமுகம், ஓவியம் எனப் பல படைப்புகளை எழுதினார். அப்பகுதியின் பொறுப்பாசிரியராக இருந்த தோழர் அ.குமரேசன், மு.முருகேசன் என ஒரே பெயரில் எல்லாப் படைப்புகளும் வர வேண்டாமென்று என்று சொல்லி, சில படைப்புகளில் பெயரை மு.மு என்றும், மு.முருகேஷ் என்றும் போடவே, அப்போதிலிருந்தே மு.முருகேஷ் எனும் பெயரால் பரவலாக அறியப்படலானார்.

1990-இல் தனது நண்பர்கள் பூவண்ணன், கவித்தூரிகையோடு இணைந்து 'தெருவோர தேசம்' எனும் கவிதை நூலினை வெளியிட்டார். அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் படித்து முடித்த கையோடு,





புதுக்கோட்டையில் தொடங்கப் பட்ட எழுத்தறிவிக்கும் இயக்கமான அறிவொளி இயக்கத்தில் தன்னையும் ஒரு தொண்டராக இணைத்துக் கொண்டார். முதலில் கலைக்குழுத் தலைவராகச் சென்று, பின்னர் அறிவொளி இயக்க எழுத்தராகவும், 'ஊர்கூடி' இதழின் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

இக்காலத்தில் தான் மக்களின் மீதான அவரது கவனமும் குவிந்தது. கூடுதலாக இலக்கியத்தின் சமூகத் தேவையையும் நன்கு உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அறிவொளி வகுப்புகளில் கிராமத்து எளிய உழைக்கும் மக்கள் சொன்ன விடுகதைகளைத் தொகுத்து 'மண் மணம் வீசும் மக்களின் விடுகதைகள்' எனும் நூலாக வெளியிட்டார்.

1993-இல் 'விரல் நுனியில் வானம்' எனும் ஹைக்கூ கவிதை நூலையும், 1996-இல் 'பூவின் நிழல்' எனும் புதுக்கவிதை நூலையும் வெளியிட்டார். இவ்விரு நூல்களும் பரவலான பாராட்டுதல்களையும் கவனிப்பையும் பெற்றன. 'பூவின் நிழல்' நூலுக்கு தமுஎச-செல்வன் கார்க்கி விருதும், பாரத ஸ்டேட் வங்கி வழங்கிய சிறந்த கவிதை நூலுக்கான பரிசும் கிடைத்தன.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியிலிருந்து வெளிவந்த 'பூங்குயில்' இதழின் மூலமாக அ.வெண்ணிலாவின் நட்பு கிடைத்தது. இலக்கியப் பயணங்களில் இணைந்திருந்த இருவரும் 1998-இல் இல்லற வாழ்விலும் இணைந்தனர்.

இவர்களது மண நாளில் இருவரது கவிதைகளும் இணைந்து



வெளியிட்ட 'என் மனசை உன் தூரிகை தொட்டு' நூல், மிகுந்த வரவேற்பைப் பெற்றதோடு, மூன்றே மாதத்தில் ஆயிரம் பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன.

வந்தவாசிக்கு குடியேறிய மு.முருகேஷ்-அ.வெண்ணிலா இணையர், தொடர்ந்து இலக்கியக் கூட்டங்களை நடத்துவதிலும் கவனம் செலுத்தினர். சென்னையிலுள்ள லயோலா கல்லூரியின் பண்பாடு - மக்கள் தொடர்பகத்தில் ஊடகப் பயிற்றுநராகப் பணியேற்றார் மு.முருகேஷ். ஏராளமான இலக்கிய நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தொடர்ந்து சன் டி.வி, ஜெயா டி.வி, மக்கள் தொலைக்காட்சி, பொதிகை தொலைக்காட்சி, பாரதி தொலைக் காட்சி உள்ளிட்டவற்றின் நேர்காணலிலும், கவியரங்க நிகழ்வுகளிலும் பங்கேற்றார்.

ஜப்பானிய மூவரி கவிதை வடிவமான ஹைக்கூவைத் தமிழில் பரவலாகக் கொண்டுசெல்லும் நோக்கில் 2000-த்தில் 'இனிய ஹைக்கூ' எனும் எண் வழி இதழினைத் தொடங்கி, அதன் மூலமாகத் தமிழகமெங்கும் 'ஹைக்கூ கவிதைத் திருவிழா'க்களை நடத்தினார். இந்த விழாக்களில் கவிக்கோ அப்துல் ரகுமான், மகாகவி ஈரோடு தமிழன்பன், கவிஞர்கள் அமுதபாரதி, கவிமுகில், எழுத்தாளர்கள் மாலன், பெருமாள்முருகன், பேராசிரியர் இராம.குருநாதன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

2004-ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்று உலகையே உலுக்கிய ஆழிப்பேரலை எனும் சுனாமி தாக்குதலுக்குத் தமிழகத்தின் பல கடலோர மாவட்டங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. தமிழ்நாடு அறிவியல் இயக்கமும், யுனிசெப் நிறுவனமும் இணைந்து நடத்திய 'ஆஃப்டர் ஸ்கூல் புரோகிராம்' எனும் திட்டத்தின் மாநிலக் கருத்தாளராகப் பொறுப்பேற்று, நாகப்பட்டினம்





மாவட்டத்திலுள்ள சுனாமி பாதித்த கிராமங்களுக்குச் சென்று, அங்கே பெற்றோரை இழந்த குழந்தைகளின் கல்விக்கான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செய்தார்.

2006-ஆம் ஆண்டில் எய்டு-இந்தியா தொண்டு நிறுவனம் முன்னெடுத்த 'படிப்பும் இனிக்கும்' திட்டத்தின் திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளராகப் பணியேற்று, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள அரசு ஆரம்பப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் தமிழ் வாசிப்புத்திறன் அதிகரிக்கும் செயலில் ஈடுபட்டு, திருவண்ணாமலை மாவட்டம் முதலிடத்தில் வர துணைநின்றார்.

கிராமப்புற ஏழைக்குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு நிறுவனங்கள் வழங்கிய கல்வி உதவித்தொகையைப் பெற்று, பத்தாண்டுகளுக்கும் மேலாக 70-க்கும் மேற்பட்ட குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்குப் பேருதவி புரிந்தார். மேலும், யுரேகா கல்வி இயக்கத்தின் மூலமாக ஏழைக்குழந்தைகளுக்கான கணினி பயிற்சி மையத்தை வந்தவாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கீழ்க்கொடுங்காலூர், மருதாடு, பொன்னூர், கீழ்க்கொவளைவேடு, அம்மையப்பட்டு ஆகிய 5 கிராமங்களில் தொடங்கி, மிகக் குறைந்த கட்டணத்தில் (மாதம் ரூ.50/- மட்டுமே) பல்லாயிரம்



மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பனுடன்

கிராமப்புற குழந்தைகளுக்கு கணினி பயிற்சி கிடைக்க வழிசெய்தார்.

இச்சூழலில் கவிஞரது கவனம், குழந்தைகளுக்கான படைப்பிலக்கியத்தின் மீது திரும்பியது. குழந்தைகளுக்காகவே சிறுசிறு கதைகளை எழுதத் தொடங்கினார். பெரிய வயிறு குருவி, கொஞ்சம் வேலை நிறைய சம்பளம் ஆகிய நூல்களை எழுதினார். குழந்தைகளுக்கென கதையெழுதும் பயிற்சியை ஆசிரியர்களுக்கு அளித்து, அக்கதைகளைத் தொகுத்து 'மலையிலிருந்து கதை அருவி' எனும் நூலாக வெளிக்கொண்டு வந்தார். குழந்தைகளுக்கென்றே கதை, கட்டுரை, செயல்பாட்டு நூல்களை எழுதத் தொடங்கினார். இடையிடையே புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை, சிறுகதை, கட்டுரை நூல்களையும் எழுதினார்.

மு.முருகேஷ் எழுதிய 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' எனும் சிறுவர் கதை நூலுக்கு இந்திய அரசின் 2021-ஆம் ஆண்டிற்கான 'பால சாகித்திய புரஸ்கார் விருது' கிடைத்தது. இவரது படைப்புகள் இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், ஜப்பானிஷ், மலாய் ஆகிய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 10-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் இளமுனைவர் பட்ட ஆய்வையும், 5 மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வும் செய்துள்ளனர். பல கல்லூரிகளில் இவரது புதுக்கவிதை மற்றும் ஹைக்கூ கவிதைகள் படமாக வைக்கப்பட்டுள்ளன.

2009-இல் பெங்களூருவில் நடைபெற்ற உலக ஹைக்கூ கிளப் மாநாட்டில் பங்கேற்று, உலக அளவிலான ஹைக்கூ கவிதைப்



போட்டியில் பரிசினை வென்றார்.

2010-ஆம் ஆண்டில் தமிழக அரசு புதிதாக உருவாக்கிய 'சமச்சீர்ப் பாடத்திட்டக்குழு'வின் ஒருங்கிணைப்பாளராக இருந்து, ஒன்று மற்றும் ஆறாம் வகுப்பிற்கான பாடப்புத்தகங்களை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றியுள்ளார். மேலும், இலக்கிய விழாக்களில் உரையாற்றுவதற்காக இதுவரை சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, குவைத் ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார்.

2008-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை இலக்கியப் பேரவை 'ஹைக்கூ வித்தகர்' எனும் விருதினையும், 2013-ஆம் ஆண்டில் மலேசியா எஸ்.பழனிவேல் நினைவு அறக்கட்டளை 'வள்ளுவர் விருதி'னையும், 2016-இல் குவைத் நாட்டிலுள்ள வளைகுடா வானம்பாடி கவிஞர்கள் சங்கம் 'குறுங்கவிச் செல்வர்' எனும் விருதினையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது. 2018-ஆம் ஆண்டில் தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறையும் பொது நூலகத்துறையும் இணைந்து 'நூலக ஆர்வலர் விருதி'னை வழங்கியுள்ளது. 2022-இல் அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் இவரது இலக்கியச் செயல்பாடுகளுக்காக 'மதிப்புறு முனைவர்' பட்டத்தையும் வழங்கி, கவுரவித்துள்ளது.



'தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம்' எனும் அமைப்பினைத் தொடங்கி, கடந்த 2022இல் திருச்சியிலும், 2023-இல் அந்தமானிலும், 2024-இல் மதுரையிலும், 2025-இல் இலங்கையிலும் 'தமிழ் ஹைக்கூ: உலக மாநாடு'களை நடத்தியுள்ளார்.



நான்காவது ஹைக்கூ உலக மாநாடு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் 2025 மே மாதம் நடைபெற்றபொழுது- உடனிருப்பவர்கள் நந்தவனம் சந்திரசேகரன் மற்றும் புரவலர் ஹாஷிம் உமர் தம்பதிகள்

வாழ்வின் மீதான தீராத காதலையும், மனித நேயத்தையும் தனது படைப்புகளின் வழியாகத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கவிஞர் மு.முருகேஷ், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகச் சற்றும் சோர்வடையாமல் தொடர்ந்து படைப்பிலக்கியத் தளத்தில் ஆற்றலுடன் செயலாற்றி வருகிறார்.

தனது தொடர் எழுத்தாக்கத்தில் இதுவரை 10 புதுக்கவிதை, 14 ஹைக்கூ கவிதை, 41 குழந்தை இலக்கியம், 16 கட்டுரை நூல்கள், ஒரு சிறுகதை நூலையும் எழுதியுள்ளார். மேலும், பல்துறை சார்ந்த 14 நூல்களையும் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

'வெறும் பெயருக் காகவும் புகழுக்காகவும் மட்டுமே எழுதுவது மக்களுக்கான எழுத்தாகாது. இந்த மண்ணின் சிறப்பையும், மக்களின் வாழ்க்கையையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஆவணமாக எழுத்து இருக்க வேண்டும்' எனும் மன உறுதியுடன் செயலையும் சிந்தனையையும் ஒரே புள்ளியில் குவித்து, தொடர்ந்து எழுதிவரும் கவிஞர் மு.முருகேஷுக்கு 'முத்தமிழ் கலசம்' இதழின் வாயிலாக மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தகவல்:**

மருத்துவர், கவிஞர்
ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்- ஸ்ரீலங்கா




தமிழ்
இந்து தமிழ்


செளமா







# பொங்கலோ பொங்கல்....

.
ஆழவே உழுத ஏரும்
அருங்கதிர் விளைக்கும் நீரும்
வாழவே வைக்கும் மேழி
வர்கத்தார் கொண்ட பேரும்
தாழவே வாய்ப்பே அன்றித்
தழுவிநம் பண்பாட் டோடு
சூழவே வந்து வாழ்க
சுவைகளைத் தந்து வாழ்க

.
மண்ணெலாங் கதிராய்ப் பூத்து
மணிமணி யாக நெல்லும்
எண்ணிலாப் படிய ளக்க
இறையருள் பெரிதாய் ஓங்கி
வெண்ணிலா காட்டிக் காட்டி
வியன்பசி தீரும் பிள்ளை
எண்ணியே தொடர்க இந்த
எழிமிகு விவசா யத்தை

.
இப்பெரும் பொங்கல் நாளை
இதயமே கனிய நானும்
செப்பிட வந்தே னையா
சீர்தமிழ்த் தந்தே னையா
ஒப்பிலா தமிழ ருக்கே
உரிதானத் திருநாள் இஃதில்
தப்பிலா மேழி யர்க்குத்
தமிழ்மொழி வாழ்த்து மையா





**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு

9 786249 425606